


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 232 04.04.2026 சனிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 232 Saturday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(4-4-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-21
பிறை: தேய்பிறை
திதி
துவிதியை காலை 10.09 வரை பிறகு திருதியை.
நட்சத்திரம்:
சுவாதி இரவு 9.26 வரை பிறகு விசாகம்.
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00-10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி
சூலம் - கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 5-6 மணி.

மேஷம் .................... வரவு
ரிஷபம் .................... லாபம்
மிதுனம் .................... துணிவு
கடகம் .................... பாராட்டு
சிம்மம் .................... புகழ்
கன்னி .................... பாராட்டு
துலாம் .................... பண்பு
விருச்சிகம் .................... கவனம்
தனுசு .................... உதவி
மகரம் .................... நட்பு
கும்பம் .................... நன்மை
மீனம் .................... உண்மை


# தமிழக பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியீடு: சாத்தூரில் நயினார், மயிலாப்பூரில் தமிழிசை போட்டி

**சென்னை, ஏப்.4:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நயினார் நாகேந்திரன் சாத்தூரிலும், தமிழிசை சவுந்தர்ராஜன் மயிலாப்பூரிலும், எல்.முருகன் அவிநாசி (தனி) தொகுதியிலும், வானதி சீனிவாசன் கோவை தெற்கிலும் போட்டியிடுகின்றனர். அண்ணாமலை தேர்தலில் போட்டியிடவில்லை.

தமிழகத்தில் வரும் 23-ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில், 4 முனைப் போட்டி நிலவும் சூழலில் அதிமுக தலைமையிலான பாஜக, பாமக, அமமுக, தாமக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதில், பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக இம்முறை 27 தொகுதிகளில் களம் காண்கிறது.

## வேட்பாளர் பட்டியலில் அண்ணாமலை பெயர் இடம்பெறவில்லை!



தமிழக பாஜக வேட்பாளர்கள் விவரம்:

1. ஆவடி - ராஜசிம்ம மஹிந்திரா என்ற அஸ்வின் குமார்
2. மயிலாப்பூர் - தமிழிசை சவுந்தர்ராஜன்
3. தளி - நாகேஷ் குமார்
4. திருவண்ணாமலை - ஏழுமலை
5. ராசிபுரம் (தனி) - பிரேம்குமார்
6. மொடக்குறிச்சி - கிருத்திகா சிவகுமார்
7. உதகமண்டலம் - போஜராஜன்
8. அவிநாசி (தனி) - எல். முருகன்
9. திருப்பூர் தெற்கு - தங்கராஜ்
10. கோவை வடக்கு - வானதி சீனிவாசன்
11. திருவாரூர் - கோவி. சந்துரு
12. தஞ்சாவூர் - முருகானந்தம்
13. கந்தர்வக்கோட்டை (தனி) - உதயகுமார்
14. புதுக்கோட்டை - ராமச்சந்திரன்
15. அறந்தாங்கி - கவிதா ஸ்ரீகாந்த்
16. திருப்பத்தூர் - திருமாறன்
17. மானாமதுரை (தனி) - பால கணபதி
18. மதுரை தெற்கு - ராம ஸ்ரீநிவாசன்
19. சாத்தூர் - நயினார் நாகேந்திரன்
20. ராமநாதபுரம் - நாகேந்திரன்
21. திருச்செந்தூர் - ராதாகிருஷ்ணன்
22. வாசுதேவநல்லூர் (தனி) - ஆனந்தன் ஐயாசாமி
23. ராதாபுரம் - பாலகிருஷ்ணன்
24. நாகர்கோவில் - காந்தி
25. குளச்சல் - சிவக்குமார்
26. பத்மநாபபுரம் - ரமேஷ்
27. விளவங்கோடு - விஜயதரணி

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

### இழுபறிக்குக் காரணம் அண்ணாமலைதானா?

அதிகம் எதிர்பார்க்கப்பட்டு வந்த பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியாகியிருக்கிறது. பட்டியல் தயாரிப்புப் பணி நடைபெற்று வந்த போது, கோவை வடக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட அண்ணாமலை விருப்பம் தெரிவித்திருந்ததாகவும், ஆனால், அந்த தொகுதி வானதி சீனிவாசனுக்கு ஒதுக்க கட்சித் தலைமை முடிவெடுத்திருந்ததாகவும் கூறப்பட்டது.

பிறகு, அண்ணாமலையை மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட கட்சித் தலைமை வலியுறுத்தி வந்ததாகவும், ஆனால், கோவை வடக்கு தொகுதி கிடைக்கவில்லை என்றால் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று அண்ணாமலை திட்டவட்டமாக தெரிவித்துவிட்டதாக தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பான பேச்சுவார்த்தையால்தான் வேட்பாளர் பட்டியல் வெளியாகவில்லை என்று கூறப்பட்டு வந்த நிலையில், அண்ணாமலை நிச்சயம் தேர்தலில் போட்டியிடுவார் என்று கூறப்பட்டது. ஆனால், நேற்று வெளியான பாஜக வேட்பாளர் பட்டியலில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட அண்ணாமலையின் பெயர் இடம்பெறவில்லை. இது அண்ணாமலை ஆதரவாளர்களுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

# மக்கள் சேவையே மகேசன் பணி: அரசு ஊழியர்களுக்குப் பிரதமர் அறிவுரை

**புதுடெல்லி, ஏப்.4:**

"மக்கள் சேவையே மகேசன் பணி" என்ற கொள்கையுடன் அரசு ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தி உள்ளார்.

மத்திய அரசு ஊழியர்களுக்காக 'கர்மயோகி சாதனா சப்தாஹ்' என்ற பெயரில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. இதன்படி ஏப்ரல் 2 முதல் 8-ம் தேதி வரை சிறப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதன் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி வாயிலாக பேசியதாவது: கடந்த பிப்ரவரியில் பிரதமர் அலுவலகத்தை (சேவா தீர்த்) திறந்து வைத்தேன்.

அப்போது, "வரும் 2047-க்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு சேவா தீர்த் அலுவலகங்களில் மத்திய அரசு ஊழியர்கள் கால் பதிக்க வேண்டும்" என்று அழைப்பு விடுத்தேன். இப்போதும் அதே கருத்தை முன்வைக்கிறேன். மத்திய அரசு துறைகளில் பணியாற்றும் ஒவ்வொரு ஊழியரும் கர்மயோகியாக செயல்பட வேண்டும்.

'மக்கள் சேவையே மகேசன் பணி' என்ற கொள்கையுடன் அரசு ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும். மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு கனவு இருக்கிறது. அதை நிறைவேற்ற அரசு ஊழியர்கள் முழு ஆதரவு அளிக்க வேண்டும். இன்றைய உலகில் தொழில்நுட்பங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்று உள்ளன.



> மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு கனவு இருக்கிறது. அதை நிறைவேற்ற அரசு ஊழியர்கள் முழு ஆதரவு அளிக்க வேண்டும். இன்றைய உலகில் தொழில்நுட்பங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்று உள்ளன.

கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசின் அனைத்து துறைகளிலும் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளன. ஆட்சி நிர்வாகத்தில் புதிய தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். தற்போது ஆட்சி நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கும் முன்னுரிமை அளித்து வருகிறோம். இதன்மூலம் அரசு நிர்வாகத் திறன் மேலும் மேம்படும்.

அனைத்து அரசு ஊழியர்களும் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற வேண்டும். ஒரு காலத்தில் முன்னேறிய மாநிலங்கள், பின்தங்கிய மாநிலங்கள், நலிவடைந்த மாநிலங்கள் என்று பல்வேறு பிரிவுகள் இருந்தன.

மத்திய அரசின் நடவடிக்கைகளால் இந்த இடைவெளி குறைந்திருக்கிறது. மாநிலங்கள் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே நமது நாடு வளர்ச்சி அடையும். கிராமங்கள், நகரங்களில் செயல்படும் மத்திய அரசு அலுவலகங்கள், மத்திய அரசின் முகமாக உள்ளன.

அவற்றில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் மக்களின் நம்பிக்கையை பெறும் வகையில் பணியாற்ற வேண்டும். வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற நமது லட்சிய பயணத்தில் "கர்மயோகி சாதனா சப்தாஹ்" பயிற்சி முகாம் மிக முக்கிய அத்தியாயமாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழகம் முழுவதும் 23 ஆயிரம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த திட்டம்: தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

**சென்னை, ஏப்.4:**

தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு (SVEEP) திட்டம் தமிழகம் முழுவதும் விரிவாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கம், வாக்காளர் விழிப்புணர்வை அதிகரிப்பது, தார்மீக அடிப்படையிலான வாக்களிப்பை ஊக்குவிப்பது மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடையே முழுமையான தேர்தல் பங்கேற்பை உறுதிசெய்வதாகும்.

மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் சட்டமன்ற தொகுதிகள் அளவில் இந்த முன்னெடுப்புகளைத் தீவிரமாக செயல்படுத்தி வருகின்றனர். மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகின்றன. பெரிய அளவில் 1,486, சிறிய அளவில் 22,130 நிகழ்ச்சிகள் என மொத்தம், 23,616 நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நேர்மையான வாக்களிப்பு: பெரிய அளவிலான நிகழ்ச்சிகளில் மாரத்தான் போட்டிகள், மனிதச் சங்கிலிகள், வாக்காளர் உறுதிமொழிப் பிரச்சாரங்கள் மற்றும் கல்லூரிகளில் உள்ள தேர்தல் எழுத்தறிவு சங்கங்களின் செயல்பாடுகள் ஆகியவை அடங்கும். கூடுதலாக, ஒவ்வொரு மாவட்டமும் அதன் கலாச்சார அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையில், தனித்துவமான சின்னங்களை உருவாக்கி, அவற்றின் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு செய்திகளைத் திறம்படப் பரப்பி வருகின்றன.

இந்நிகழ்ச்சிகளில், வாக்களிப்பதன் முக்கியத்துவம், நேர்மையான வாக்களிப்பு முறைகள், வாக்காளர் வசதிக்கான நடவடிக்கைகள், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சிறப்பு முயற்சிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இம்முயற்சிகள், மாநிலத்தில் சுதந்திரமான, நியாயமான, அனைவரையும் உள்ளடக்கிய தேர்தலை நடத்துவதற்கான உறுதியை அளிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக நீதிமன்றங்களுக்கு ஏப்.23-ம் தேதி விடுமுறை: புதுச்சேரியில் ஏப்.9 விடுமுறை

**சென்னை, ஏப்.4:**

உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் எஸ்.அல்லி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ம் தேதி நடைபெறவுள்ளதால், அன்றைய தினம் சென்னை உயர் நீதிமன்றம், உயர் நீதிமன்ற மதுரை கிளை மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள கீழமை நீதிமன்றங்களுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது.

அதேபோல், புதுச்சேரியில் ஏப்.9-ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் புதுச்சேரியில் உள்ள கீழமை நீதிமன்றங்களுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மக்களவைத் தொகுதிகளை 816 ஆக அதிகரிக்க முடிவு: 16-ம் தேதி நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம்

**சென்னை, ஏப்.4:**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-ம் பகுதி நேற்று நிறைவு பெற்றது. இந்த நிலையில், 3-ம் பகுதியும் நடைபெறும் என தெரிய வந்துள்ளது. மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை விரைவில் அமல்படுத்தும் வகையில், மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை 543-ல் இருந்து 816-ஆக உயர்த்துவதற்கான மசோதாக்களை நிறைவேற்றுவதற்காக, நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் மீண்டும் வருகிற 16-ந்தேதி கூட இருப்பதாக தகவல்கள் வெளியாகின. இது 3 நாட்கள் நடைபெறும் என தெரிகிறது.

இதனை நாடாளுமன்ற விவகாரங்கள் துறை மந்திரி கிரண் ரிஜிஜு உறுதி செய்தார். நாடாளுமன்ற கூட்டம் முடிந்து நேற்று அவர் வெளியே வரும்போது, "வருகிற 16-ந்தேதி காலை 11 மணிக்கு அவையை கூட்டுமாறு நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம். நாங்கள் முக்கிய மசோதாக்களுடன் வருகிறோம். இது கால நீட்டிப்பு என்பதால், கேள்வி நேரம் மற்றும் தனிநபர் மசோதாக்கள் போன்றவை நடைபெறாது.



கடந்த 2023-ம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி மக்களவையில் 3-ல் ஒரு பகுதி இடங்கள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். புதிய மசோதாக்களின் படி மக்களவைத் தொகுதிகளின் இடங்கள் 816 ஆக அதிகரிக்கும். இதில் 273 இடங்கள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

முன்னதாக நாடாளுமன்ற மாநிலங்களவையில் இதுகுறித்த தகவலின் அடிப்படையில் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஜெயராம் ரமேஷ், 'அரசு நாடாளுமன்றத்தை கூட்ட உத்தேசித்துள்ள கூட்டத்தை 5 மாநில சட்டசபை தேர்தல் முடிவடைந்த பின்னரே நடத்த வேண்டும் என அனைத்து எதிர்க்கட்சியினரும் விரும்புவதாக' தெரிவித்தார். மாநிலங்களில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த போதிலும், அரசு இந்த மசோதாவை ஆதாயத்துக்காக முன்னெடுத்துச் செல்ல முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். எனவே, கூட்டத்தை வருகிற 29-ந்தேதிக்கு பிறகே நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இருப்பினும், பெண்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உண்டு என்று கிரண் ரிஜிஜு பதில் அளித்தார். எனவே இந்த விஷயத்தில் நாம் அரசியல் செய்ய வேண்டாம் எனவும் கூறினார்.



## காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் வெளியீடு – ஸ்ரீபெரும்புதூரில் செல்வப்பெருந்தகை போட்டி



**சோளிங்கர், ஏப்.04:** சோளிங்கரில் ஏ.எம். முனிரத்தினம், ஊத்தங்கரையில் (தனி) குப்புசாமி, கிருஷ்ணகிரியில் செல்ல குமார், பென்னாகரத்தில் ஜி.கே.எம். தமிழ் குமரன், ஆத்தூரில் (தனி) எஸ்.கே. அர்த்தனாரி, ஈரோடு(கிழக்கு) தொகுதியில் கோபிநாத் பழனியப்பன், உதகமண்டலத்தில் பி. ராமச்சந்திரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கவுண்டம்பாளையத்தில் சூர்ய பிரகாஷ், சிங்காநல்லூரில் ஸ்ரீநிதி நாயுடு, துறையூரில் (தனி) விச்சு லெனின் பிரசாத், கடலூரில் சந்திரசேகரன், மைலாடுதுறையில் ஜமால் யூனுஸ் முகம்மது ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

அறந்தாங்கியில் டி. ராமச்சந்திரன், காரைக்குடியில் எஸ். மாங்குடி, உசிலம்பட்டியில் டி. சரவணகுமார், சிவகாசியில் கணேசன் அசோகன், திருவாடானையில் ராம கருமாணிக்கம், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஊர்வசி அமிர்தராஜ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சங்கரன்கோவில் (தனி) தொகுதியில் சங்கை கணேசன், அம்பாசமுத்திரத்தில் வி.பி. துரை, நாங்குநேரியில் ரூபி மனோகரன், கொளச்சல் தொகுதியில் தங்கை கத்பெர்ட், விளவங்கோடு தொகுதியில் டி.டி. பிரவீண், கிள்ளியூரில் ராஜேஷ் குமார் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

# சாத்தான்குளம் வழக்கில் ஏப். 6-ல் தண்டனை: தூக்கு தண்டனை வழங்க சிபிஐ இறுதி வாதம்

**மதுரை, ஏப்.04:** தூத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளத்தில் தந்தை, மகன் கொலை வழக்கில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உட்பட 9 போலீஸாருக்கும் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என இறுதி வாதத்தில் சிபிஐ கேட்டுக்கொண்டுள்ளது.

ஜெயராஜ் மனைவி நீதிபதி முன்பு ஆஜராகி 9 பேருக்கும் அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என கண்ணீர் மல்க கேட்டுக் கொண்டார். இதையடுத்து தண்டனை ஏப். 6-ல் அறிவிக்கப்படும் என நீதிபதி தள்ளிவைத்தார்.

சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் ஜெயராஜ். இவரது மகன் பென்னிக்ஸ். இவர்கள் சாத்தான் குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர்.

கடந்த 2020 ஜூன் 19-ல் கரோனா ஊரடங்குக் கட்டுப்பாட்டு நேரம் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாக ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் சாத்தான்குளம் போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

பின்னர் காவல் நிலையத்தில் வைத்து இரவு முழுவதும் போலீஸார் தாக்கியதில் முதலில் பென்னிக்ஸ், அடுத்து ஜெயராஜ் உயிரிழந்தனர். இதையடுத்து சிபிஐ கொலை வழக்குப் பதிவு செய்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோர் கைது செய்யப்பட்டு மதுரை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டனர்.



இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. விசாரணை முடிந்து 9 பேரும் குற்றவாளிகள் என்றும் தண்டனை விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் நீதிபதி முத்துக்குமரன் உத்தரவிட்டார். இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதி முத்துக்குமரன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. ஸ்ரீதர் உள்ளிட்ட 9 பேரையும் போலீஸார் ஆஜர்படுத்தினர்.

பின்னர் சிபிஐ வழக்கறிஞர் விஜயன் வாதிடுகையில், குற்றம் நிரூபிக்கப்பட்டதால் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். தூக்குத் தண்டனை, இரட்டை ஆயுள் போன்ற அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். அரிதினும் அரிதான காவல் கொடூர மரண வழக்குகளில் தூக்குத் தண்டனை வழங்கலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

போலீஸாரின் செயல் மனித உரிமைக்கு எதிரானது. ஆயுதங்களால் கொடூரமாக தாக்கி இருவரையும் கொலை செய்துள்ளனர். காவல் மரணங்களில் நேரடிச் சாட்சிகள் இருக்க மாட்டார்கள். இந்த வழக்கில் 3 பேர் நேரடிச் சாட்சிகளாக உள்ளனர். எனவே 9 பேருக்கும் அதிகபட்ச தண்டனையாக தூக்குத் தண்டனை அல்லது இறக்கும் வரை சிறையில் இருக்கும் தண்டனை வழங்க வேண்டும், என்றார்.

குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டோரின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்களின் வாதம்: குற்றம்சாட்டப்பட்ட 9 பேரும் ஐந்தரை ஆண்டுகளுக்கு மேலாகச் சிறையில் உள்ளனர்.

குற்ற வழக்கில் ஒருவருக்கு தண்டனை வழங்கும்போது அவரின் குடும்பச் சூழல், உடல் நிலை, வயது, சிறையில் இருந்தது ஆகியவற்றை கவனத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஜெயராஜை விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றது வரை ஒன்றும் இல்லை. பென்னிக்ஸ் காவல் நிலையம் சென்ற பிறகுதான் அனைத்தும் நடந்துள்ளது. பென்னிக்ஸ் போலீஸாரை கோபப்படுத்தும் வகையில் நடந்துள்ளார். இதனால் போலீஸார் தாக்கியுள்ளனர். போலீஸார் உள்நோக்கத்துடன் செயல்படவில்லை.

உண்மையில் உள்நோக்கம் இருந்திருந்தால் இருவரின் உடலில் உள்ள முக்கியப் பாகங்களில் தாக்கியிருப்பார்கள். போலீஸாரின் செயல்பாடு மரணம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இல்லை. அரிதினும், அரிதான வழக்குகளில் தூக்கு தண்டனை வழங்கலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அதே நேரம் ஏன் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும்? அது அவசியமா? என்பதைப் பரிசீலிக்க வேண்டும். ஒருவர் சமுதாயத்தில் வாழத் தகுதியற்றவர், அவரை இனிமேல் திருத்த முடியாது என்ற முடிவுக்கு வரும்போது தூக்குத் தண்டனை வழங்குவது குறித்து பரிசீலிக்கலாம். இந்த மரணங்கள் உள்நோக்கம் இல்லாமல் நிகழ்ந்தது. குற்றம்சாட்டப்பட்டோர் திருந்தி வாழும் வகையில் தண்டனை வழங்க வேண்டும், என்றனர்.

தண்டனை குறித்து ஜெயராஜின் மனைவி செல்வராணியிடம் நீதிபதி கருத்து கேட்டார். அதற்கு அவர் கண்ணீர் விட்டபடியே, என் கணவரை போலீஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். விசாரித்து விட்டு அனுப்பிவிடுவார்கள் என நினைத்தேன்.

நான் காவல் நிலையம் சென்று போலீஸாரின் காலில் விழுந்து இருவரையும் விட்டுவிடுமாறு கெஞ்சினேன். அதன் பிறகும் இருவரையும் விடவில்லை. இரவு முழுவதும் இருவரையும் கொடூரமாக தாக்கிக் கொலை செய்துள்ளனர்.

அனைவருக்கும் அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும், என்றார். இறுதி வாதம் முடிந்த நிலையில் ஏப்.6-ல் தண்டனை விவரம் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்து விசாரணையை நீதிபதி தள்ளிவைத்தார்.

## வட தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி உயர வாய்ப்பு



**சென்னை, ஏப்.04:** 7-ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலுமும், 8, 9 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வட தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் ஏப்.7-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாகவும், தென் தமிழகத்தில் வழக்கமான அளவிலும் இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக தேனி மாவட்டம் சோத்துப்பாறையில் 9 செமீ, கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் 7 செமீ, வால்பாறை, சின்கோனாவில் 5 செமீ, சோலையார், தேனி மாவட்டம் தேக்கடியில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

## தமிழக டிஜிபி மாற்றத்தில் மத்திய அரசு தலையீடு

### இந்திய கம்யூ. குற்றச்சாட்டு



**சென்னை, ஏப்.04:** மத்திய அரசின் தலையீட்டால் தமிழக டிஜிபி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நெருங்கிவரும் வேளையில், மத்திய அரசின் அழுத்தத்தால் டிஜிபி வெங்கட்ராமன், தாம்பரம், மதுரை காவல் ஆணையர்கள், 2 மாவட்ட ஆட்சியர்களை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

இவர்களுடன் மேலும் பல உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய தேர்தல் ஆணையம் முயற்சிப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. தேர்தல் ஆணையம் மத்திய பாஜக அரசின் கைப்பாவையாக செயல்படுவது கண்டனத்துக்குரியது.

அரசியல் சட்டப்படி நடுநிலையோடு செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையம், பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுவது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கும், நேர்மையாக, நடுநிலையாக தேர்தலை நடத்துவதற்கும் எதிரானது. மத்திய பாஜக அரசின் வற்புறுத்தலால் மேற்கொள்ளும் இத்தகைய பாரபட்ச போக்குகளை தேர்தல் ஆணையம் உடனடியாக கைவிட வேண்டும்.

தீர்ப்புக்கு வரவேற்பு: ஆயுள் தண்டனைக் கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்வது, தண்டனைக் குறைப்பு ஆகியவற்றில் ஆளுநர்களின் தலையீடு பற்றிய உயர் நீதிமன்றத் தீர்ப்பு வரவேற்கத்தக்கது.

'ஆளுநர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது, அமைச்சரவையின் ஆலோசனையை கட்டாயம் பின்பற்ற வேண்டும். தண்டனை தளர்வு, மன்னிப்பு போன்ற அதிகாரங்கள் ஆளுநரின் தனிப்பட்ட விருப்பங்கள் அல்ல. அவை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஆலோசனையின் அடிப்படையில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டியவை' என்பதை இத்தீர்ப்பு உறுதி செய்துள்ளது.

இது ஜனநாயகம், அரசியலமைப்பு ஆட்சி மற்றும் மாநில உரிமைகளுக்கான ஒரு முக்கிய வெற்றி ஆகும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் நாளில் தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க உத்தரவு

**புதுடெல்லி, ஏப்.04:** தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்களில் வாக்குப்பதிவு தினத்தன்று தினக்கூலிகள், தற்காலிகப் பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், '1951ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 135பி-ன்படி எந்த ஒரு வணிகம், வர்த்தகம், தொழில்துறை நிறுவனம் அல்லது வேறு ஏதேனும் அமைப்பில் பணிபுரிபவர்களில் வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு நபருக்கும் வாக்குப்பதிவு நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும். இற்காக எந்த பிடித்தமும் செய்யப்படாது. இந்த விதிகளை மீறும் எந்த ஒரு உரிமையாளரும் அபராதத்துக்கு உள்ளாவார்.



தங்கள் தொகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலை அல்லது வணிக நிறுவனங்களில் பணிபுரியும் அல்லது வேலை செய்யும் வாக்காளர்கள், தேர்தல் நடைபெறும் தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்திருந்தால், வாக்குப்பதிவு நாளன்று தங்களது வாக்குகளைச் செலுத்துவதற்கு ஏதுவாக ஊதியத்துடன் கூடிய விடுமுறை பெறும் உரிமை அவர்களுக்கு உண்டு. அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளும் இதை கண்டிப்பாக பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த அறிவிப்பு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, அசாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களுக்குப் பொருந்தும். மேலும், 8 தொகுதிகளில் இடைத் தேர்தல் நடைபெற உள்ள கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய ஆறு மாநிலங்களுக்கும் இது பொருந்தும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசாம், கேரளா, புதுச்சேரி சட்டப்பேரவைகளுக்கு ஏப்ரல் 9-ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. கோவா, கர்நாடகா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநில சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் இந்த தேதியில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தல் மற்றும் குஜராத் மற்றும் மகாராஷ்டிராவின் இடைத் தேர்தல் ஆகியவ ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற உள்ளது. மேற்கு வங்கத்தைப் பொருத்தவரை ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அனைத்தும் மே 4-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## "பாஜகவுடன் நிறைய 'பி' டீம் இருக்கிறார்கள்; கவனமாக வாக்களியுங்கள்" – கனிமொழி



**சென்னை, ஏப்.04:** "புதிதாக அரசியல் கட்சி தொடங்கி இருக்கக்கூடியவர்கள் திமுகவை மட்டும்தான் எதிர்த்து பேசுவார்கள். ஒன்றிய அரசை எதிர்த்துப் பேச மாட்டார்கள். பாஜகவுடன் நிறைய பி டீம் இருக்கிறார்கள். கவனமாக வாக்களியுங்கள்" என தவெக தலைவர் விஜய்யை, திமுக எம்பி கனிமொழி விமர்சித்துள்ளார்.

மானாமதுரை திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமாருக்கு ஆதரவு தெரிவித்து திமுக எம்பி கனிமொழி பரப்புரை செய்தார். அப்போது பேசிய அவர், "இந்த தேர்தலில் நாம் கவனமாக வாக்களிக்க வேண்டும்.

பாஜகவுடன் நிறைய பி டீம் இருக்கிறார்கள். அவர்கள் நம்மைதான் விமர்சிப்பார்கள். பாஜக என்ன செய்தாலும் அதை எதிர்த்து கேள்வி கேட்க மாட்டார்கள. நம்முடைய பகைவர்கள் என்ற பெருமையை தேடிக்கொள்ள நினைக்கிறார்கள்.

புதிதாக அரசியல் கட்சி தொடங்கி இருக்கக்கூடியவர்கள் திமுகவை மட்டும்தான் எதிர்த்து பேசுவார்கள். ஒன்றிய அரசு எது செய்தாலும் அதை எதிர்த்து பேச மாட்டார்கள். அதேபோல அதிமுகவையும் எதிர்த்துக் கேள்வி கேட்க மாட்டார்கள்.

திமுகவை திரும்பத் திரும்ப சாடி, நம்மைப் பற்றி பேசி பெருமையை தேடிக் கொள்ளலாம் என நினைக்கக் கூடியவர்களை நம்பி யாரும் ஏமாந்து விடாதீர்கள். அது உங்களுடைய வாக்குகளை வீணாக்கக்கூடிய செயல்.

வரவிருக்கும் தேர்தலில் பாஜகவை இந்த தொகுதியில் முறியடிப்போம் பாஜகவுக்கு ஒரு பிடி மண் கூட தமிழகத்தில் இருந்து கிடைக்காது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழக அரசியலின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஜென்ஸீ வாக்குகள் யாருக்கு?

**திருச்சி, ஏப்.04:** தமிழகத்தில் நடைபெற உள்ள 2026 சட்டப்பேரவைத் தேர்தலில், ஜென் இசெட் (Gen Z) வாக்காளர்கள் முக்கியமான தீர்மான சக்தியாக உருவெடுத்துள்ளனர். சுமார் 1 கோடியே 18 லட்சம் இளம் வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்க உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது மொத்த வாக்காளர்களில் சுமார் 20 சதவீதமாக இருப்பதால், அரசியல் கட்சிகள் அனைத்தும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன.

ஜென் இசெட் (Gen Z) என்பது பொதுவாக 1997 முதல் 2012 வரை பிறந்தவர்களை குறிக்கும் ஒரு தலைமுறை. சிறுவயதில் இருந்தே இணையம், ஸ்மார்ட்போன் பயன்படுத்தியவர்கள். சோஷியல் மீடியாவில் அதிகமாக செயல்படுபவர்கள். 2013 முதல் பிறந்தவர்களை ஜென் ஆல்பா (Gen Alpha) என கூறுகின்றனர்

முந்தைய தலைமுறைகளைபோல 'பாரம்பரிய அரசியல், விசுவாசம்' போன்றவை இல்லாமல், ஜென் இசெட் வாக்காளர்கள், 'வாய்ப்பு, வேலை,கல்வி, நம்பிக்கை' போன்ற அம்சங்களை கொண்டு முடிவு செய்கின்றனர்.

சமூக ஊடகங்கள் இவர்களின் முக்கிய மூலமாக மாறியுள்ளதால், அரசியல் கட்சிகளும் தங்களின் பிரச்சாரத்தை முன்பைவிட டிஜிட்டல் தளங்களில் அதிகளவில் மையப்படுத்துகின்றன.

திமுக தற்போது இளைஞர்களை ஈர்க்கும் வகையில் டிஜிட்டல் பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றன. இதனால், தொடர்ச்சியான ஆட்சி, மேம்பாடு என்ற முழக்கத்தால் சில ஜென் இசெட் வாக்காளர்களை ஈர்க்கும் வாய்ப்புள்ளது.

அதேபோல, நலத் திட்டங்கள் மற்றும் பொருளாதார வாக்குறுதிகள் மூலம் இளைஞர்களை அணுகும் முயற்சியில் அதிமுக ஈடுபட்டு வருகிறது. ஏற்கெனவே, நீட் தேர்வில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கியுள்ள நிலையில், தற்போது ஆட்சிக்கு வந்தால் இந்த ஒதுக்கீடு 10 சதவீதமாக உயர்த்தப்படும் என அறிவித்து இளைஞர்களை ஈர்க்க கவனம் செலுத்தி வருகிறது.


மேலும், கூட்டணியில் உள்ள பாஜகவின் அண்ணாமலைக்கு ஜென் இசெட் அட்டேன்ஷன் கிடைத்திருக்கிறது. நேரடி தாக்கத்துடன் பேசும் பேச்சு, சோசியல் மீடியாவில் ஆக்டிவ் ஆக இருப்பது போன்றவை இதற்கு காரணங்களாக கூறப்படுகின்றன.

முன்பு எப்போதும் இல்லாமல் நடிகர் விஜய்யின் வருகையால், இளைஞர்களிடையே புதிய அரசியல் ஆர்வம் உருவாகியுள்ளது. குறிப்பாக முதல் முறை வாக்காளர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் இந்தக் கட்சி கவனம் பெற்றுள்ளது.

சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி தமிழ் அடையாளம், இயற்கை, விவசாயம் போன்ற உணர்வு பூர்வமான கருத்துகளால் இளைஞர்ளை ஈர்க்கின்றனர்.

சமூக ஊடகங்களில் வலுவான ஆதரவு இருந்தாலும், அவற்றை முழுமையாக வாக்குகளாக மாற்றுவது சவாலாகவே உள்ளது.

## புதுச்சேரியில் ரோடு ஷோ நடத்திய பிரதமர் மோடி



**புதுச்சேரி, ஏப்.04:** பாஜக சார்பில் நடைபெறும் ரோடு ஷோவில் பங்கேற்க பிரதமர் மோடி நேற்று புதுவை வந்தார்

சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் புதுவை வந்த பிரதமர் மோடியை முதலமைச்சர் ரங்கசாமி, பாஜக தலைவர் ராமலிங்கம், அமைச்சர் நமச்சிவாயம் மற்றும் வேட்பாளர்கள் வரவேற்றனர்.

தொடர்ந்து அங்கிருந்து கார் மூலம் அஜந்தா சந்திப்புக்கு வந்த பிரதமர் மோடி மாலை 4.15 மணிக்கு ரோடு ஷோ தொடங்கினார்.

இதில் முதலமைச்சர் ரங்கசாமி உள்பட பலர் பங்கேற்றனர். அண்ணா சாலை வழியாக வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் மக்களை அவர் சந்தித்து வாக்குகளை சேகரித்தார். நேரு வீதி சந்திப்பில் ரோடு ஷோ நிறைவடைகிறது.

சுமார் 1.5 கிமீ நடக்கும் ரோடு ஷோவையொட்டி அஜந்தா சிக்னல் முதல் நேரு வீதி வரை அண்ணா சாலை விழாகோலம் பூண்டது. மாடிகளில் இருந்து மலர் தூவி வரவேற்கவும், ஆங்காங்கே சிலம்பாட்டம், ஒயிலாட்டம் என பாரம்பரிய கலைகளுடன் வரவேற்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த ரோடு ஷோவில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு பிரதமர் மோடி திறந்த வேனில் நின்றபடி பொதுமக்களிடம் ஆதரவு திரட்டினார்.

**WANTED**

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்க ள் தேவைப்படுவர்/வேலை தேடுப வரும் அனுகவும். 8668107106



















**WANTED**

**JAY SECURITY FORCE**

பணி வாய்ப்புகள்

• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்

• இடங்கள்:
  • பெருங்குடி, துரைப் பாக்கம்
  • காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  • விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97






















**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




**WANTED**

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872



# கவிதை அரங்கம்!



குளத்தில் நீந்தும்
தாமரையைபோல்
மன ஓடையில்
நீந்துகின்றது
உன் நினைவு

உன்
தோள்சாய
சோகங்களும்
சொப்பனமாய்
கலையும்

வில்லின்றி
எய்தாய்
விழி அம்பை
துளைத்தது சுகமாய்
இதயத்தை

அடம்பிடிக்கும்
குழந்தையாய்
அடங்க மறுக்கின்றது
உன் நினைவு

## வாழ்க்கை தத்துவம்...



ஏற்றுக் கொள்ளும்
மனப்பக்குவம் வந்து
விட்டால் பிறகு என்ன
நடந்தாலும் கவலை
என்பது இல்லை

பிறருக்கு கொடுத்து
உதவ முடியாவிட்டாலும்
கெடுதல் நினைக்காமல்
இருந்தாலே அது
பெரிய உதவிதான்

மறைக்க நினைக்கும்
மனிதர்களிடம் மறந்தும்
மயங்கிவிடாதீர்கள்

எல்லோருக்கும் பிடித்த மாதிரி
வாழ முடியாது என்பதை
நினைவில் வைத்து கொண்டால்
போதும் பல நேரங்களில்
நம்மை நாமே கடக்க

# அத்தை மக ரத்தினமே...

எனக்கு எட்டுவயது இருக்கும் போது என் அத்தைக்கு குழந்தை பிறந்தது அதுவும் பெண் குழந்தை குழந்தையில் பார்ப்பதற்கு அப்படி ஒரு அழகாய் இருப்பாள் அவள். நான் சின்னப் பையனாய் இருந்ததால் எனக்கான விளையாட்டு பொம்மையாகிப் போனாள் அவள். என் அத்தையும் மாமாவும் என் வீட்டிற்கு இரண்டு வீடு தள்ளியே குடியிருந்தார்கள் அதனால் தானோ என்னவோ நான் அன்றாடம் அங்கே சென்று குட்டிப் பாப்பாவோடு விளையாடுவது வழக்கமாகிப் போனது.

பாப்பாவுக்கு பெயர் வைக்கிற விசேஷம் நடந்தது ஊரில் இருக்கும் அத்தனை சொந்த பந்தங்களும் என் அத்தை வீட்டில் கூடியிருந்தார்கள் எப்போதும் எங்கள் வீடும் அத்தை வீடும் வெவ்வேறாய் இருந்ததில்லை இரண்டும் ஒன்றுதான் என்பது போல் இருக்கும் காரணம் எல்லாவற்றிலும் இரண்டற கலந்தே இருப்போம். பாப்பாவுக்கு பெயர் வைப்பதற்கு எல்லோரும் ஒவ்வொரு பெயரை தேர்வு செய்து சொன்னார்கள் என் அத்தை மாமா கூட வேறு ஒரு பெயரை சொன்னார்கள் அவர்கள் சொன்ன எந்த பெயரிலும்.... எனக்கு உடன்பாடில்லாமல் இருந்தது.

எந்த பெயரிலும் உடன்பாடு இல்லாது இருந்த எனக்கு ஏனோ தெரியவில்லை என்னையும் அறியாமல் என் முகம் வாட்டமாய் இருந்தது எப்படியோ என் அத்தை என்னை கவனித்து விட்டாள் போலிருக்கிறது என் அருகே வந்து என் தலையை வாஞ்சையோடு தடவியபடி"ஏப்பா இப்படி மூஞ்சி உம்மென்று வைத்துக்கொண்டு இருக்கிறாய்? ஏன் என்னாயிற்று...?" என்ற அத்தை என் கன்னங்களை செல்லமாய் கிள்ளி படி கேட்டாள். அத்தையை பொருத்தவரை நானும் அவளுக்கு குழந்தைதான் அவளுக்கு ஆரம்பத்தில் இருந்து என் மீது எப்போதும் ஒரு தனி பாசம் இருந்து கொண்டே இருக்கும் என் வீட்டில் யாராவது என்னை திட்டினாலோ, அடித்தாலோ கூட என் அத்தை குறுக்கே வந்து நின்று அவர்களிடம் சண்டைக்கு நிப்பாள்.

அந்த நேரத்தில் நான் மெதுவாக அத்தையிடம் சொன்னேன் நீங்கள் தெரிவுசெய்து இருக்கிற எந்த பெயரும் பாப்பாவுக்கு வைக்க எனக்கு பிடிக்கவில்லை என்றேன். "அப்படியானால் உன் பாப்பாவுக்கு நீயே ஒரு பெயரை சொல்லேன் என்று செல்லமாக என்னை தட்டினாள் அத்தை. இதுதான் சமயம் என்று என் மனதில் உள்ள ஒரு பெயரை அத்தையின் காதில் கிசுகிசுத்தேன் நான் அத்தையின் காதில் கிசுகிசுத்த அடுத்த வினாடி அத்தை மிகவும் ஆச்சரியமாகவும் அதிசயமாக தன்னை பார்த்தாள். "இங்க பாருடா தங்கம் நீ சொல்ற தேவயானி என்கிற பெயர் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு ....நான் கொஞ்சம் மாமா கிட்டயும் கேக்குறேன் நல்ல பெயர் தான்டா என் செல்லமே" என்றபடி உறவினர்களையும் மாமாவையும் நோக்கி அடக்க ஆரம்பித்தாள்.

அத்தை மாமாவிடமும், உறவினர்களிடமும்...என்ன சொன்னாள் என்று எனக்கு தெரியவில்லை ஆனால் எல்லோரும் ஒருசேர ஒரேநேரத்தில் என்னை பார்த்து சிரித்தார்கள். அந்த சிரிப்பில் ஏதோ கேலியும் கிண்டலும் கலந்திருப்பது போல எனது தெரிந்தது. வேகமாக...மாமா என்னிடம் வந்து என்னை கட்டி அணைத்தபடி "சூப்பர்ரா தங்கம் நீ சொன்ன பேரையே பாப்பாவுக்கு வச்சிடலாம்" என்றார். நான் சொன்ன பெயரை மாமா ஒத்துக் கொண்டதற்கு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது கொஞ்சம் தலைகால் புரியாமல் கூட ஆடினேன் என்றே சொல்லலாம்.

பாப்பாவின் காதுகளில் எல்லோரும் தேவயானி. தேவயானி.. தேவயானி... என்று மூன்று முறை அழைத்தார்கள் என்னை அருகே கூப்பிட்டு நீயும் பாப்பாவின் காதில் நீ விரும்பிய பெயரை சொல் என்றார்கள் எனக்கு முகமெல்லாம் மகிழ்ச்சியில் பூத்துக் குலுங்கியது அது என்ன மாயமோ தெரியவில்லை நான் பாபாவின் அருகில் சென்றதும் பாப்பா என்னை பார்த்து குலுங்கி குலுங்கி சிரித்தாள். அந்த சிரிப்பில் நான் என்னையே மறந்து தேவயானி என்கிற பெயரை மூன்று முறை உச்சரித்தேன். ஒரு வழியாக பெயர் சூட்டு விழா முடிந்து எல்லோருக்கும் கிளம்பி விட்ட பிறகு நான் பாப்பாவை என் மடியில் கிடைத்தயபடி வைத்து கொஞ்சுக் கொண்டிருந்தேன். அவளும் நான் சொல்வதை எல்லாம் புரிந்து கொண்டதைப் போல கையையும் அலையும் அசைத்து அவளுடைய பூ முகத்தால் என்னை பார்த்தபடி சிரித்துக் கொண்டே இருந்தாள்.

மெல்ல..மெல்ல... காலங்கள் உருண்டோடியது, இப்போது பாப்பா பனிரெண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறாள். நானும் கல்லூரியில் இரண்டாம் டிகிரி முடிக்க போகிறேன் எங்கள் இருவருடைய அன்பும் பாசமும் ஒரே நேர்கோட்டில் சென்று கொண்டிருந்தது என்றாலும் எனக்கு ஒரு தயக்கம் மயக்கம் இருந்து கொண்டு தான் இருந்தது காரணம் பாப்பாவின் அழகு என்னை சற்றே தூர நிற்க வைத்தது ஏனென்றால் நான் அட்டைகரி பாப்பாவோ ரதியையும் மிஞ்சி விடுகிற ஓரழகுத்தோரணை உள்ளவள் அவளுக்கும் எனக்கும் எந்த விதத்திலும் ஒத்து வராது என்று நான் நினைத்தேன் என் குடும்பத்தார்கள் எங்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று பேசுகிற போதெல்லாம் எனக்கு ஒரு தயக்கமும் ஒரு நடுக்கமும் இருந்து கொண்டே இருந்தது. பாப்பா வருகிற போகிற இடங்களில் அவளை சந்திப்பதை நான் தவிர்த்துக்கொண்டே இருந்தேன்.

அந்தப் பேரழகு இந்தக்கரி மூட்டையோடு ஒன்றாக சேருமா என்கிற மனத்தயக்கம் எனக்கு. பல தருணங்களில் பல நேரங்களில் பாப்பா என்னிடம் நெருங்கி நெருங்கி வருவார் நானோ ஒதுங்கி ஒதுங்கி போக ஆரம்பித்தேன் இது பாப்பாவின் மனசுக்கு பெரும் காயத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்று எனக்கு தெரியவில்லை.

ஒரு நாள் என் வீட்டில் ரூமுக்குள் நான் இருந்தபோது சடேரென்று என் ரூமுக்குள் வந்த பாப்பா கதவை படேரென்ன சாத்திவிட்டு,என்னை என் கன்னத்தில் மாறி மாறி அடிக்க ஆரம்பித்தாள் ஏதும் செய்வதறியாது அதிர்ந்து போய் நின்றேன் நான்.

"ஏன் மாமா என்னா யிற்று உனக்கு எதற்காக என்னை தவிர்த்து செல்கிறாய் ஏன் என்னிடம் பேச மாட்டேன்கிறாய்"

என்று கேட்டபடி கேவி கேவி அழ ஆரம்பித்தாள் பாப்பா. அந்தஅழகுப் பதுமை அப்படி அழுது நான் என்றுமே பார்த்ததில்லை... நான் என்ன நினைத்து அவளை தவிர்த்து நடக்கிறேன் என்பதை அவள் புரிந்து கொண்டாளென்று தெரிகிறது. அவளை ஆரத்தழுவி அவளது கேசங்களை கோதியபடி அவளுக்கு ஆருதலாக என்னை நான் இழந்து கொண்டிருந்தேன்.

சற்றும் எதிர்பாராத அந்த நேரத்தில் சடேரெண கதவை திறந்து கொண்டு என்னுடைய மொத்த குடும்பமும், அத்தை மாமா, அம்மா அப்பா வென... உள்நுழைந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து ரூமுக்குள் வருவார்கள் என்று நாங்கள் இருவரும் எதிர்பார்க்கவில்லை... மிகவும் சந்கோஜத்தோடு நாங்கள் இருவரும் கையை பிசைந்தபடி நின்று கொண்டிருந்தோம்.

"டேய் பசங்களா நாங்கள் இதைத்தான் எதிர்பார்த்தோம்... இனி எப்போதும் நீங்கள் இருவரும் இப்படியே ஒன்றாகவே இருக்க வேண்டும் இதுதான் எங்களாசை"

என்று கூறிவிட்டு ஆனந்தமும் மகிழ்ச்சியும் கலந்த முகத்தோடு அத்தையும், மற்ற எல்லோரும் மீண்டும் கதவை சாத்திவிட்டு எல்லோரும் வெளியேறிச்சென்று விட... மீண்டும் அது கோபத்தோடு அதே தாபத்தோடு என்னை என் கன்னத்தில் அடிக்க ஆரம்பித்தாள் என் அத்தை மகள்.

முத்தையா மோகன்
கோயம்புத்தூர் 18.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*வாடிக்கையாளர்: சர்வர், என்னோட சாப்பாட்டுல ஒரு ஈ மிதக்குது!*
*சர்வர்: சார், அதுக்காக 5 ரூபாய் எக்ஸ்ட்ரா கொடுக்க வேண்டாம், அது எங்க ஹோட்டல் தர்மம்!*

*மனைவி: ஏங்க, நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி எனக்கு நிறைய கிஃப்ட் கொடுத்தீங்களே, இப்ப ஏன் கொடுக்கறது இல்ல?*
*கணவன்: நீ எங்கயாவது பாத்துருக்கியா... மீன் பிடிச்சதுக்கு அப்புறம் யாராவது தூண்டிலுக்கு இரை போடுவாங்களா?*



# தினம் ஒரு சமையல்



## கிராமத்து மீன் குழம்பு

தேவையான பொருட்கள்:

¼ கிலோ -மத்தி மீன்
6 -வெங்காயம்
2 -தக்காளி
6 -பல் பூண்டு
2 -பச்சை மிளகாய்
1 -மேஜை கரண்டி வரை மல்லி
1 -தேக்கரண்டி சீரகம்
1 -தேக்கரண்டி மிளகு
½ -தேக்கரண்டி சோம்பு
4 -காய்ந்த மிளகாய்
¼ -மூடி தேங்காய்
சிறிதளவு -புளி
½ தேக்கரண்டி -கடுகு
¼ தேக்கரண்டி -வெந்தயம்
கருவேப்பிலை
¼ தேக்கரண்டி -மஞ்சள் தூள்
உப்பு
50 மில்லி -எண்ணெய்



செய்முறை:

ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் அதில் மல்லி,சீரகம், சொம்பு,காய்ந்த மிளகாயை சேர்த்து நன்றாக வறுக்கவும்.

பின்பு வெங்காயம், தக்காளி,தேங்காய் இவை அனைத்தும் நன்றாக வதக்கி அனைத்தையும் அரைத்து எடுக்கவும்

பிறகு ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் அதில் கடுகு,வெங்காயம்,கருவேப்பிலை, பச்சை மிளகாய்,பூண்டு சேர்த்து நன்றாக வதக்கவும்.பின்பு அதில் புளி கரைசல் சேர்த்து நன்றாக கொதிக்க விடவும்.

பின்பு அதில் அரைத்து வைத்த கலவையை சேர்த்து நன்றாக கொதிக்க விடவும்.பிறகு அதில் மத்தி மீன் சேர்க்கவும்.ஒரு கொதி வந்ததும் அதில்

கொத்தமல்லி தூவி இறக்கவும்.

## வெண்ஊமத்தை பயன்கள்



வெள்ளை ஊமத்தை (DATURA STRAMONIUM) என்பது முட்கள் நிறைந்த காய் மற்றும் நீளமான வெள்ளை பூக்களைக் கொண்ட, சாலையோரங்களில் வளரும் ஒரு மருத்துவ மூலிகைச் செடியாகும். இது வாத மூட்டுவலி, நீண்ட நாள் ஆறாத புண்கள் மற்றும் இசிவு நோய்களைக் குணப்படுத்த பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. எனினும், இது நச்சுத்தன்மை வாய்ந்தது, எனவே எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்.

வெள்ளை ஊமத்தையின் முக்கிய அம்சங்கள்:

தாவர விளக்கம்: 3-5 அடி உயரம் வளரக்கூடிய குறும் செடி, இலைகள் பற்கள் உள்ள விளிம்புகளைக் கொண்டிருக்கும்.

வகைகள்: ஊமத்தையில் வெள்ளை, கரு, பொன் என மூன்று வகைகள் உள்ளன.

மருத்துவப் பயன்கள்:

மூட்டுவலி: வெள்ளை ஊமத்தை இலைகளைக் கொண்டு வாதத்தினால் வரும் மூட்டுவலியைப் போக்கலாம்.

புண்கள்: ஆறாத புண்களை குணப்படுத்த இதன் இலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

மூச்சுத் திணறல்: ஆஸ்துமா போன்ற மூச்சுத் திணறல் பிரச்சினைகளுக்கு, இதன் காய்ந்த இலைகள் மூலிகை சிகரெட்டாகப் பயன்படுத்தப்படுகின்றன.

நச்சுத்தன்மை: செடியின் அனைத்துப் பாகங்களும் நச்சுத்தன்மை கொண்டவை என்பதால், சித்த மருத்துவரின் ஆலோசனை இன்றி உட்கொள்ளக்கூடாது.

எச்சரிக்கை: வெள்ளை ஊமத்தையைப் பயன்படுத்துவதற்கு முன், நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவது மிகவும் அவசியம்.




# அவனுக்கு இதுதான் முதல் தடவை.! அனுமன் கோயிலுக்கு நாயுடன் சென்ற த்ரிஷா.! வெடித்த பூகம்பம்



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை திரிஷா. இவர் சமீபத்தில் விஜயின் விவாகரத்து வழக்கு தொடர்பான தகவல்களில் சிக்கிப் பேசுபொருளாக இருந்து வருகிறார். அதிலும் அவர் விஜயுடன் இணைந்து திருமண விழாவிற்குச் சென்றது, இந்த விவகாரத்திற்கு மேலும் வலுச்சேர்த்தது.

சமீப காலமாகவே திரிஷாவை சுற்றி ஏதாவது ஒரு செய்தி பரபரப்பாகவே காணப்படுகிறது. சமீபத்தில் தமிழ்நாடு பாஜக தலைவரை பெயர் குறிப்பிடாமல் கண்டித்து கண்டன அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

சமீபத்தில் அனுமன் கோயிலுக்குச் சென்ற திரிஷா தன்னுடைய செல்லப் பிராணியையும் அழைத்துச் சென்றுள்ளார். இது தொடர்பாக தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படத்தையும் பகிர்ந்து, தன்னுடைய செல்லப் பிராணி முதல் முறையாக கோயிலுக்கு வந்துள்ளதாகப் பதிவிட்டிருந்தார்.

இதைப் பார்த்த ரசிகர்கள், செல்லப் பிராணியை கோயிலுக்கு அழைத்துச் செல்லலாமா என்ற கேள்வியை எழுப்பி வருகின்றனர். பக்தர்களும் கோயிலுக்கு எப்படி ஒரு நாயை அழைத்துச் செல்லலாம் என்று கேள்வி எழுப்புகின்றனர். இன்னும் சிலர் கோயிலுக்கு நாயை அழைத்துச் செல்வதில் எந்தத் தவறும் இல்லை எனவும் பதிவிட்டு வருகின்றனர்.



அடிக்கடி மிகவும் கவர்ச்சியாக வெளியிடும் ஹாட் போட்டோக்கள் இணையத்தில் ரசிகர்கள் மத்தியில் படுவைரல் ஆகின்றன.

தற்போது சேலையில் சற்று கிளாமர் ஆக அஞ்சு குரியன் போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்திருக்கிறார். அந்த அழகிய ஸ்டில்களை பாருங்க.

# பிரபல தெலுங்கு இயக்குநருடன் பிரதீப் ரங்கநாதன் கூட்டணி.. புது உச்சத்தைத் தொட்ட சம்பளம்



நடிகர் பிரதீப் ரங்கநாதன் தமிழ் சினிமாவின் முன்னணி ஹீரோவாக வளர்ந்து நிற்கிறார். தொடர்ந்து மூன்று 100 கோடி ரூபாய் வசூல் படங்களைக் கொடுத்திருக்கிறார் அவர்.

லவ் டுடே, டிராகன், டியூட் ஆகிய படங்கள் ரசிகர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில் பிரதீப் ரங்கநாதன் விரைவில் தெலுங்கு சினிமாவில் களமிறங்க இருக்கிறார். அவர் பிரபல இயக்குநர் சந்திரசேகர் ஏலேட்டியுடன் கூட்டணி சேர்வதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

ஆக்ஷன் த்ரில்லர் படமாக உருவாகும் இந்தப் படத்தில் நடிக்க பிரதீப் ரங்கநாதன் 50 கோடி ரூபாய் சம்பளமாக வாங்குகிறார் எனவும் தகவல் வந்திருக்கிறது.

இவ்வளவு வேகமாக 50 கோடி சம்பளத்தைத் தொட்டிருக்கும் பிரதீப் ரங்கநாதனைப் பார்த்து மற்ற ஹீரோக்கள் நிச்சயம் ஆச்சரியம் அடைந்திருப்பார்கள் என சினிமா ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# மாம்பழத்துறை புஷ்கலாதேவி திருக்கோவில்...


தர்ம சாஸ்தாவான ஐயப்பனுடன் ஐக்கியமான புஷ்கலாதேவி கேரள மாநிலம் ஆரியங்காவு அருகிலுள்ள மாம்பழத்துறையில் குடிகொண்டிருக்கிறாள். இவளை வழிபட்டால் விரைவில் திருமணம் கைகூடும்.

புஷ்கலாதேவியை திருமணம் புரிந்த தர்மசாஸ்தா ஆரியன்காவு வனப்பகுதியில் தங்கியிருந்தார். ஒரு நாள் இரவு தங்கியிருந்த இடத்திற்கு வெளியே பயமுறுத்தும் விதத்தில் சப்தம் கேட்டது. அச்சம் அடைந்த புஷ்கலாதேவியிடம்,"பயப்படாதே.

வனப்பகுதியில் வேட்டைக்காக புலி செல்கிறது" என்றார் சாஸ்தா. "அது எப்படி இங்கிருந்தே உங்களால் புலி செல்வதை தெரிந்து கொண்டீர்கள்" எனக் கேட்டாள். தான் ஒரு தெய்வப்பிறவி என்பதால் உணர்ந்ததாக தெரிவித்தார் சாஸ்தா. அப்போது அவரது மனதிற்குள் தன் அவதார நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அதற்காக தந்திரியை அழைத்து, "நான் புஷ்கலாதேவியின் பக்தியை ஏற்று முக்தியளிக்க முடிவு செய்து விட்டேன். அதனால் அடர்ந்த வனப்பகுதியில் ஓரிடத்தை தேர்வு செய்து அவளை நிரந்தரமாக தங்க ஏற்பாடு செய்யும்படி கட்டளையிட்டார். மறுநாள் தந்திரி அடர்ந்த வனப்பகுதிக்குள் புஷ்கலாதேவியை அழைத்து சென்றார். செல்லும் வழியெங்கும் சாஸ்தாவின் அவதார நோக்கத்தையும், அவரது





பெருமைகளை விளக்கினார். தந்திரி முன் செல்ல அவரை பின்தொடர்ந்து மனம் மயங்கிய நிலையில் புஷ்கலாதேவியும் நடந்தார். மாம்பழத்துறையை அடைந்ததும் அங்குள்ள மண்டபத்திற்குள் புஷ்கலாதேவி உள்ளே சென்றதும் வெளியே கதவைத் தாழிட்டார். அதிர்ச்சியில் அவள் கூக்குரலிட்டாள். சிறிது நேரம் கழித்து கதவைத் திறந்த போது காளியின் வடிவில் உக்கிர கோலத்தில் புஷ்கலாதேவி இருப்பதைக் கண்டார்.

அவளிடம், "தெய்வப்பிறவியான சாஸ்தாவின் காவல் பணிக்கு உன்னால் தடை, தாமதம் ஏற்படக் கூடாது என்பதால் இங்கு அழைத்து வந்தேன், அவர் மனப்பூர்வமாக உன்னை ஏற்றுக் கொண்டதால், சூரியன், சந்திரன் உள்ள வரை ஆரியங்காவில் சாஸ்தாவுடன் திருமண வைபவம் நடக்கும்" என்று வாக்களித்தார். ஒவ்வொரு ஆண்டும் புஷ்கலா தேவிக்கு சவுராஷ்டிரா சமூகத்தினர் மரபுப்படி விழா நடக்கிறது.

கருவறையில் பகவதி அம்மனாக புஷ்கலாதேவி இருக்கிறாள். விநாயகர், நாகர், கருப்பசாமி, சிவபெருமான், இசக்கி அம்மன் சன்னதிகள் உள்ளன. கோயில் எதிரில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான மாமரம் உள்ளது. அருகில் கல்லடை ஆறு ஓடுகிறது. தர்மசாஸ்தாவின் படை வீடுகளான ஆரியங்காவு, அச்சன்கோயில், குளத்துப்புழை, சபரிமலை கோயில்கள் ஒரே நேர்கோட்டில் உள்ளன. இவற்றின் நடுவில் மாம்பழத்துறை உள்ளது.

ஆரியங்காவில் ஆண்டு தோறும் மார்கழியில் சவுராஷ்டிரா சமூகத்தினர், திருவிதாங்கூர் தேவசம் போர்டு சார்பில் சாஸ்தா புஷ்கலாதேவி திருமண நிகழ்ச்சி நடக்கிறது. இதற்காக மாம்பழத்துறை கோயிலில் கார்த்திகை1ல் அணையாதீபம் ஏற்றுவர். அத்தீபம் ஆரியங்காவுக்கு ஊர்வலமாக எடுத்து வரப்படும். இத்தீபம் புஷ்கலா தேவியாக கருதப்படுகிறது. ஆரியங்காவில் ஏற்றப்படும் அணையாதீபத்தில் அதனை சேர்ப்பர். அதன்பின் பாண்டியன் முடிப்பு என்னும் நிச்சயதார்த்தம், திருமண வைபவம் நடைபெறும். 12 ஆண்டுக்கு ஒருமுறை இங்கு தேவ பிரசன்னம் பார்க்கப்படும். விழாவில் தேவிக்கு கலசாபிஷேகம், பொங்கலிட்டு வழிபடுவர். இவரை தரிசித்தால் நல்ல மணவாழ்வு கிடைக்கும்.

நேரம்: காலை 6:00 9:00 மணி, மாலை 5:00 7:00 மணி

BALACHANDAR

## தினம் ஒரு தலைவர்கள்

# சர்தார்சிங்ஜி ராவாஜி ராணா வரலாறு

சர்தார்சிங்ஜி ராணா, ஏப்ரல் 10, 1870 அன்று (இந்து நாட்காட்டியின்படி சைத்ரா சூட் 9) கத்தியவாரில் உள்ள காந்தரியா கிராமத்தில் இரண்டாம் ராவாஜி மற்றும் ஃபுலாஜிபா ஆகியோரின் ராஜபுத்திர குடும்பத்தில் பிறந்தார்.அவர் துலி பள்ளியில் பயின்றார், பின்னர் ராஜ்கோட்டில் உள்ள ஆல்ஃபிரட் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார், அங்கு அவர் மோகன்தாஸ் காந்தியின் வகுப்புத் தோழராக இருந்தார். 1891 இல் தனது மெட்ரிகுலேஷன் முடித்த பிறகு, அவர் எல்பின்ஸ்டன் கல்லூரியில் பயின்றார், 1898 இல் பம்பாய் பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம் பெற்றார். அவர் புனேவில் உள்ள பெர்குசன் கல்லூரியிலும் பயின்றார், அங்கு அவர் லோக்மான்ய திலகர் மற்றும் சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோரைத் தொடர்பு கொண்டார். 1895 ஆம் ஆண்டு புனேவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தன்னார்வத் தொண்டு செய்ததால், அவர் ஹோம் ரூல் இயக்கத்தில் சேரத் தூண்டப்பட்டார். படிப்பை முடித்த பிறகு, அவர் வழக்கறிஞர் பட்டம் படிக்க லண்டனுக்குச் சென்றார். அங்கு அவருக்கு ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா மற்றும் பிகாஜி காமா ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. லண்டனில் இந்தியா ஹவுஸ் நிறுவுவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். தனது ஆரம்ப காலத்தில் பிங்காடா கிராமத்தைச் சேர்ந்த சோன்பாவை மணந்தார், அவருக்கு ரஞ்சித்சிங் மற்றும் நட்வர்சிங் என்ற இரண்டு மகன்கள் இருந்தனர். 1899 ஆம் ஆண்டில், வழக்கறிஞர் பட்டம் பெற்ற பிறகு ராணா பாரிஸுக்குச் சென்றார். உலக வர்த்தக கண்காட்சிக்காக பாரிஸில் இருந்த காம்பேயைச் சேர்ந்த நகை வியாபாரி ஜீவன்சந்த் உத்தம்சந்தின் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அவர் ஒரு நிபுணராகி, முத்துக்களை வர்த்தகம் செய்யும் நகை வணிகத்தைத் தொடங்கினார். அவர் பாரிஸில் உள்ள 56, ரூ லா ஃபாயெட் தெருவில் வசித்து வந்தார். இந்த நேரத்தில்தான் ராணா இந்திய தேசியவாத அரசியல்வாதிகளுடன் பழகத் தொடங்கினார், அவர்களில் பாரிஸுக்குச் சென்று ராணாவுடன் தங்கியதாக அறியப்படும் லாலா லஜபதி ராய் உட்பட. 1905 ஆம் ஆண்டில், ராணா இந்திய ஹோம் ரூல் சொசைட்டியின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரானார், அதில் அவர் துணைத் தலைவராக இருந்தார்.

முன்செர்ஷா புர்ஜோர்ஜி கோத்ரேஜ் மற்றும் பிகாஜி காமாவுடன் சேர்ந்து, ஐரோப்பிய கண்டத்தில் இந்திய ஹோம் ரூல் சொசைட்டியின் விரிவாக்கமாக அதே ஆண்டு பாரிஸ் இந்தியன் சொசைட்டியை நிறுவினார். ஷ்யாம்ஜி கிருஷ்ண வர்மாவும் செய்தது போல், ராணா இந்திய மாணவர்களுக்கு மூன்று உதவித்தொகைகளை அறிவித்தார், ஒவ்வொன்றும் ரூ.2,000 [முழு மேற்கோள் தேவை] தி இந்தியன் சோஷியாலஜிஸ்ட் இதழில் டிசம்பர் 1905 இதழில். அவர் பல உதவித்தொகைகள் மற்றும் பயண உதவித்தொகைகளை அறிவித்திருந்தார். அவர் இந்திய சுதந்திர இயக்கத்திற்கு பல வழிகளில் உதவினார். 1909 ஆம் ஆண்டு கர்சன் வில்லியைக் கொல்ல மதன் லால் திங்ரா தனது துப்பாக்கியைப் பயன்படுத்தினார். விநாயக் தாமோதர் சாவர்க்கரின் தடைசெய்யப்பட்ட புத்தகமான "இந்திய சுதந்திரப் போர்" வெளியிட அவர் உதவினார். 1910 ஆம் ஆண்டு ஹேக்கில் உள்ள நிரந்தர நடுவர் நீதிமன்றத்தில் அவர் மார்சேயில் அடைக்கலம் கொடுத்த வழக்கிலும் அவருக்கு உதவினார். லாலா லஜபதி ராய் ஐந்து ஆண்டுகள் தனது வீட்டில் தங்கியிருந்தபோது "அன்ஹேபி இந்தியா" என்ற புத்தகத்தை எழுதினார். மாஸ்கோவில் குண்டுகள் தயாரிப்பது குறித்து ஆய்வு செய்ய சேனாபதி பாபட் பயணிக்க அவர் உதவினார். ஜெர்மன் வானொலியில் பார்வையாளர்களாக உரையாற்ற சுபாஷ் சந்திர போஸுக்கு உதவினார். பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கும் அவர் உதவினார்.

மேடம் காமா மற்றும் எஸ். ஆர். ராணா, 1907 காமாவுடன் சேர்ந்து அவர் பிரெஞ்சு மற்றும் ரஷ்ய சோசலிச இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்துக் கொண்டார் மேலும் அவருடன் ஆகஸ்ட் 18, 1907 அன்று ஸ்டட்கார்ட்டில் நடந்த இரண்டாவது சோசலிச மாநாட்டில் கலந்து கொண்டார், அங்கு காமாவால் "இந்திய சுதந்திரக் கொடி" வழங்கப்பட்டது. அப்போதிருந்து, அவர் பந்தே மாதரம் (பாரிஸைச் சேர்ந்த காமாவால் வெளியிடப்பட்டது) மற்றும் தி தல்வர் (பெர்லினிலிருந்து) ஆகியவற்றிற்கு தொடர்ந்து பங்களிப்பாளராக இருந்தார், பின்னர் அவை இந்தியாவிற்கு கடத்தப்பட்டன.


முதலாம் உலகப் போருக்கு முந்தைய ஆண்டுகள் ராணாவின் தனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்க்கைக்கு திருப்புமுனையாக அமைந்தன. பாரிஸில், அவர் ரெசி என்ற ஜெர்மன் பெண்ணுடன் வாழ்ந்ததாக அறியப்படுகிறது, அவர் - அவர் அவரை மணக்கவில்லை என்றாலும் - திருமதி ராணா என்று அறியப்பட்டார். அவரது முதல் மனைவி சொன்னபோது அவர்கள் 1904 இல் திருமணம் செய்து கொண்டனர். அவரது இரண்டு மகன்களும் அவருடன் தங்க பாரிஸுக்கு குடிபெயர்ந்தனர். இறக்கும் நிலையில் இருந்த அவரது மகன் ரஞ்சித்சிங் மற்றும் அவரது ஜெர்மன் மனைவியுடன், அவர் 1911 இல் பிரெஞ்சு அரசாங்கத்தால் மார்டினிக்கிற்கு நாடுகடத்தப்பட்டார். பிரெஞ்சு சுரேட்டின் அழுத்தத்தின் கீழ் பாரிஸ் இந்திய சங்கத்தின் நடவடிக்கைகள் குறைக்கப்பட்டன, இறுதியாக 1914 இல் இடைநீக்கம் செய்யப்பட்டன. அவரது மகன் ரஞ்சித்சிங் 1914 இல் இறந்தார். புற்றுநோய் அறுவை சிகிச்சைக்காக பிரான்சுக்குள் நுழைய அவரது மனைவிக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. 1920 ஆம் ஆண்டு அவர் பிரான்சுக்குத் திரும்பினார். அவரது ஜெர்மன் மனைவி 1931 இல் புற்றுநோயால் இறந்தார். 1947 ஆம் ஆண்டு ஹரித்வாரில் தனது மகன் ரஞ்சித்சிங்கின் எலும்பு மூழ்கும் சடங்குகளைச் செய்ய அவர் இந்தியாவுக்கு வருகை தந்தார். அவர் 23 ஏப்ரல் 1948 அன்று திரும்பினார். அவர் தனது தொழிலை முடித்துக்கொண்டு 1955 இல் உடல்நலக் குறைவு ஏற்பட்டபோது இந்தியாவுக்குத் திரும்பினார். பின்னர் அவருக்கு பக்கவாதமும் ஏற்பட்டது. அவர் மே 25, 1957 அன்று வேராவலின் சர்க்யூட் ஹவுஸில் (தற்போது குஜராத்தில் உள்ளது) இறந்தார்.



மரபு மற்றும் அங்கீகாரம் 1951 ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசாங்கத்தால் அவருக்கு செவாலியர் விருது வழங்கப்பட்டது. அவரது உருவப்படங்கள் குஜராத் சட்டமன்றத்திலும், வேராவலில் உள்ள அவரது இறந்த இடத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

அவரது கொள்ளுப் பேரன் ராஜேந்திரசிங் ராணா 1996 முதல் 2014 வரை பாவ்நகரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

# மதுரை விமான நிலையத்தில் இமிகிரேஷன் சோதனை மேற்கொள்ளப்படும் - மத்திய மந்திரி




புதுடெல்லி, ஏப்.4:

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது விருதுநகர் எம்.பி. மாணிக்கம் தாகூர், மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவித்ததற்கு நன்றி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் பேசுகையில், "மதுரைக்கு அதிகளவில் வெளிநாட்டு விமானங்கள் வந்து செல்வதை உறுதிப்படுத்த, வெளிநாட்டு விமான போக்குவரத்திற்கான இருதரப்பு சேவைகள் ஒப்பந்தத்தின் கீழ், மதுரை சர்வதேச விமான நிலையத்தையும், ஒரு முக்கிய முனையமாக சேர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமா? அவ்வாறு செய்தால், தமிழகத்தின் தென் பகுதிகளில் சுற்றுலா, ரெயில் மற்றும் பொருளாதாரம் வளர்ச்சி பெறும்" என்று கூறினார்.

அதற்கு சிவில் விமான போக்குவரத்து மந்திரி ராம் மோகன் நாயுடு பதில் அளித்தார். அவர் கூறுகையில், "தமிழ்நாட்டின் மீது கொண்டுள்ள அக்கறை காரணமாகவே மதுரை சர்வதேச விமான நிலையம் அமைவற்கு ஒப்புதல் அளிக்க முடிந்தது. இதன்மூலமாக மதுரை மக்களின் நீண்டகால விருப்பத்தை நிறைவேற்றி உள்ளோம். மதுரையை ஒரு சர்வதேச விமான நிலையமாக மாற்றியதால் ஒருவர் அனைத்து இமிகிரேஷன் (குடிவரவு) சோதனைகளையும் மதுரையிலேயே முடித்துவிட்டு விமானத்தில் ஏறலாம். விமான நிலையத்துக்கு உள்ளேயே பயணத்தை இடைநிறுத்தி, சர்வதேச இணைப்புக்கும் உள்நாட்டு நகரங்களுக்கும் செல்லலாம். இது மதுரை மக்களுக்கு வழங்கும் மற்றொரு வசதி ஆகும்" என்று ராம் மோகன் நாயுடு கூறினார்.

# மற்றொரு செயற்கை மழைக்கு தயாராகும் டில்லி: கடந்த கால முயற்சிகளை ஆய்வு செய்யும் ஐஐடி கான்பூர்

புதுடெல்லி, ஏப்.4:



இந்த கோடையில் டில்லி மற்றொருசெயற்கைமழைக்காக மேக விதைப்பு சோதனையை சந்திக்கக்கூடும் என்று அதிகாரி ஒருவர் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

கடந்த ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் தேசிய தலைநகரில் இரண்டு சுற்று மேக விதைப்பு சோதனைகள் நடத்தப்பட்டன. டில்லி சுற்றுச்சூழல் துறைக்கும் கான்பூர் இந்திய தொழில்நுட்பக் கழகத்திற்கும் (ஐஐடி) இடையே கடந்த ஆண்டு செப்டம்பர் 25 அன்று கையொப்பமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்த சோதனைகள் நடைபெற்றது. இருப்பினும், இந்த சோதனை நகரத்தில் எந்த மழையையும் ஏற்படுத்தவில்லை.

ஐஐடி கான்பூர், ஒரு அறிக்கையில், மேகங்களில் குறைந்த ஈரப்பதம் காரணமாக தோல்வியடைந்தது. எவ்வாறாயினும், சோதனைகளின் அவதானிப்புகள் எதிர்கால நடவடிக்கைகளுக்கான திட்டத்தை வலுப்படுத்தும்.

சிறந்த நிலைமைகளை அடையாளம் காண உதவும். மேகவிதைப்பு என்பது வானிலை மாற்ற நுட்பமாகும். இது மேகத்தின் மழைப்பொழிவை உருவாக்கும் திறனை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.

சில்வர் அயோடைடு மற்றும் பிற சோர்மங்கள் போன்ற பொருள்களை மேகங்களாக சிதறடித்து மாற்றங்களைத் தூண்டுவது, பனி படிகங்கள் அல்லது மழைத்துளிகள் உருவாவதை ஊக்குவிப்பது இதில் அடங்கும்.

கடந்த ஆண்டு சோதனையின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு முறையும், சில்வர் அயோடைடு மற்றும் சோடியம் குளோரைடு கொண்ட எட்டு ரசாயன எரிப்புகள் வெளியிடப்பட்டன.

இந்தப் பரிசோதனையை அடுத்து, டில்லி அரசு ஒரு அறிக்கையை வெளியிட்டது. இந்த சோதனைகள் இலக்குவைக்கப்பட்ட இடங்களில் துகள்களைக் குறைக்க உதவியது என்று கூறியது.

# 5 மாநிலங்களிலும் தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க உத்தரவு!

புதுடெல்லி, ஏப்.4:



சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களிலும் தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இம்மாத இறுதிக்குள் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, நடத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், வாக்காளர்கள், தங்கள் ஜனநாயக உரிமையை எந்தவிதத் தடையுமில்லாமல் பயன்படுத்துவதை உறுதி செய்யும்வகையிலும், எந்த அச்சமும் இல்லாமல் வாக்களிப்பதையும் நினைவில்கொண்டு, சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களிலும் தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்குமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, கேரளம், புதுச்சேரி, அஸ்ஸாம் ஆகிய 3 மாநிலங்களிலும் ஏப்ரல் 23 ஆம் தேதியிலும், தமிழகத்தில் ஏப்ரல் 23 ஆம் தேதியிலும், மேற்கு வங்கத்துக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய இரு தேதிகளிலும் தனியார் நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இதனை மீறும் நிறுவனங்கள் மீது தொழிலாளர் நலத்துறை மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# தொலைநிலை, இணையவழி படிப்புகளுக்கு யுஜிசி அங்கீகாரம்: ஏப். 10 வரை விண்ணப்பிக்கலாம்

புதுடெல்லி, ஏப்.4:

தொலைநிலை, இணையவழிப் படிப்புகளுக்கு யுஜிசி அங்கீகாரம் பெற பல்கலைக்கழகங்கள் ஏப். 10-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக மானியக்குழு (யுஜிசி) செயலர் மணிஷ் ஆர்.ஜோஷி வெளியிட்ட அறிவிப்பு: நிகழ் கல்வியாண்டில் (2025-2026) பிப்ரவரி பருவத்தின் சேர்க்கைக்கான தொலைநிலை படிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதையடுத்து யுஜிசி ஒழுங்குமுறை விதிகளின் அடிப்படையில் முழுமையான கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட உயர்கல்வி நிறுவனங்கள் தொலைநிலை, இணையவழியிலான படிப்புகளைக் கற்றுதர அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம்.

இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு கடந்த மார்ச் 1-இல் தொடங்கி 30-ஆம் தேதியுடன் முடிவடைந்தது. தற்போது பல்வேறு தரப்பின் கோரிக்கைகளை ஏற்று விண்ணப்பிக்கும் கால அவகாசம் ஏப்ரல் 10-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தகுதியான கல்வி நிறுவனங்கள் வலைத்தளம் வழியாக துரிதமாக விண்ணப்பிக்க வேண்டும். அதன்பின்னர் விண்ணப்ப நகலை உரிய ஆவணங்களுடன் சேர்த்து ஏப்ரல் 13-ஆம் தேதிக்குள் தில்லியில் உள்ள யுஜிசி தலைமை அலுவலகத்தில் வந்து சேரும்படி கல்வி நிறுவனங்கள் அனுப்பிவைக்க வேண்டும்.

# யுபிஐ பரிவர்த்தனை மார்ச்சில் புதிய உச்சம்

புதுடெல்லி, ஏப்.4:




இந்தியாவின் எண்ம பணப்பரிவர்த்தனை தளமான யுபிஐ, கடந்த மார்ச் மாதத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

ஹோலி, ரமலான் போன்ற பண்டிகைகள் மற்றும் நிதியாண்டு இறுதி கணக்கு முடிப்புகள் காரணமாக, மார்ச்சில் மட்டும் ரூ.29.53 லட்சம் கோடி மதிப்பிலான பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதாக இந்திய தேசிய பரிவர்த்தனை கழகம் (என்பிசிஐ) தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீத வளர்ச்சியாகும். அதேபோல், பிப்ரவரியுடன் ஒப்பிடுகையில் பரிவர்த்தனை மதிப்பு 10 சதவீதம் உயர்ந்துள்ளது.

பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையிலும் யுபிஐ இமாலய சாதனை படைத்துள்ளது. கடந்த பிப்ரவரியில் 2,039 கோடியாக இருந்த பரிவர்த்தனை எண்ணிக்கை, மார்ச்சில் 2,264 கோடியாக அதிகரித்து, 24 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

மார்ச் மாதத்தின் சராசரி தினசரிபரிவர்த்தனை அளவு 73 கோடியாகவும், அதன் சராசரி மதிப்பு ரூ.95,243 கோடியாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்தியாவின் மொத்த எண்ம பரிவர்த்தனைகளில் யுபிஐ மட்டுமே 85 சதவீதம்பங்களிப்பதாகப்புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

# கடந்த ஆண்டில் இந்தியர்களின் சராசரி கைப்பேசி இணைய பயன்பாடு 31 ஜிபி! நோக்கியா ஆய்வில் தகவல்



புதுடெல்லி, ஏப்.4:

கடந்த 2025-ஆம் ஆண்டில், ஒரு பயனர் மாதத்துக்கு சராசரியாக 31 ஜிபி இணைய தரவு பயன்படுத்தியுள்ளது நோக்கியா நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது. இது முந்தைய 2024-இல் இருந்த 27.5 ஜிபி என்ற அளவைவிட 18 சதவீத வளர்ச்சியாகும்.

5ஜி தொழில்நுட்பத்தின் ஆதிக்கம்: இந்தியாவின் ஒட்டுமொத்த கைப்பேசி இணைய போக்குவரத்தில் 5ஜிசேவையின் பங்களிப்பு 47 சதவீதமாக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் 5ஜி இணைய பயன்பாடு ஓராண்டில் 70 சதவீதம் அதிகரித்து, 12.9 எக்சாபைட் என்ற அளவை எட்டியுள்ளது. அதிவேக இணையம், ஏ.ஐ. செயலிகளின் பயன்பாடு, '4கே' தரத்திலான விடியோக்கள், ஆன்லைன் கேமிங் ஆகியவற்றின் மீதான ஆர்வம் இந்தப் பெருக்கத்துக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

உலக அளவில் 2-ஆம் இடம்: இந்த வளர்ச்சியின்மூலம், உலகின் 2-ஆவது மிகப்பெரிய 5ஜி வாடிக்கையாளர் தளத்தைக் கொண்ட நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

அதேபோல், 5ஜி தரவு நுகர்வு மற்றும் 5ஜி 'ஃபிக்சட் வயர்லெஸ் அக்சஸ் (எஃப்.டபிள்யூ.எஸ்.)' பயன்பாட்டிலும் இந்தியா உலக அளவில் 2-ஆம் இடத்தில் உள்ளது. 5ஜி பயன்பாட்டில் எஃப்.டபிள்யூ.எஸ். மட்டும் 25 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

மலிவுவிலைபோன்களின் வருகை: சந்தையில் 100 டாலருக்கும் குறைவான விலையில் (சுமார் ரூ.9,400) கிடைக்கும் 5ஜி பட்ஜெட் ரக ஸ்மார்ட்போன்களின் வருகை 10 மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் விற்பனையான ஸ்மார்ட்போன்களில் 90 சதவீதத்துக்கும் அதிகமானவை 5ஜி தொழில்நுட்பத்தைக் கொண்டிருந்தன. தற்போது இந்தியாவில் உள்ள சுமார் 89 கோடி 4ஜி சாதனங்களில், 38 கோடிக்கும் அதிகமானவை 5ஜி வசதி கொண்டவை என ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

பெருநகரங்களில் மட்டும் மொத்த இணைய பயன்பாட்டில் 58 சதவீதம் 5ஜி மூலமாகவே கிடைக்கிறது.

வரும் 2031-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் 5ஜி சந்தாதாரர்களின் எண்ணிக்கை 100 கோடியைக் கடக்கும் என நோக்கியா கணித்துள்ளது.

# ஆந்திரத்தின் தலைநகராக அமராவதி: இரு அவைகளிலும் மசோதா நிறைவேற்றம்!

திருப்பதி, ஏப்.4:

ஆந்திர பிரதேசத்தின் தலைநகராக அமராவதியை அங்கீகரிக்கும் மசோதா இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.

ஆந்திர பிரதேச மாநிலத்தின் நிரந்தர தலைநகரமாக அமராவதியை அங்கீகரிக்கும் மசோதா, மாநிலங்களவையில் இன்று (ஏப். 2) ஒப்புதல் அளிக்கப்பட்டது. முன்னதாக, புதன்கிழமையில் மக்களவையிலும் இம்மசோதா நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இம்மசோதா குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அவரின் ஒப்புதல் கிடைத்ததும், 2026 ஜூன் 2 முதல் ஆந்திர தலைநகர் அமராவதி என்று சட்ட ரீதியாக அங்கீகாரம் கிடைத்துவிடும்.

பின்னணி: ஒருங்கிணைந்த ஆந்திரம் 2 மாநிலங்களாக ஆந்திரம், தெலங்கானா எனப் பிரிக்கப்பட்டபோது, முந்தைய ஆந்திர மாநில தலைநகராக விளங்கிய ஹைதராபாத் நகரம், தெலங்கானா மாநிலத் தலைநகராக்கப்பட்டது.

அதேநேரத்தில் ஆந்திரத்துக்கு அமராவதி தலைநகராக இருக்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், 2019-ல் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சி அமைந்ததும், ஒரே தலைநகரம் அமைப்பதற்குப் பதிலாக 3 தலைநகரங்கள் இருக்கும் என அப்போதைய முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி அறிவித்தார்.

இந்த நிலையில், மீண்டும் 2024 தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி வென்று ஆட்சியமைத்ததும் அமராவதி மீண்டும் தலைநகராக்கப்பட்டது. இதுதொடர்பான மசோதா, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தற்போது ஒப்புதலும் பெற்றுள்ளது.

தலைநகராக அமராவதி ஒப்புதலைப் பெற்றதைத் தொடர்ந்து, ஆளுங்கட்சியான தெலுங்கு தேசகட்சியினர் கேக்வெட்டிக் கொண்டாடி வருகின்றனர்.

# டேட்டிங் செயலிகள் பயன்படுத்தும் 40 லட்சம் பேர்! திருமணம் மீறிய உறவுகளும் அதிகரிப்பு

புதுடெல்லி, ஏப்.4:

இந்தியாவில் திருமணம் மீறிய உறவுகள் கணிசமாக அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில், டேட்டிங் செயலிகளின் பயன்பாடு அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. அதிலும் திருமணம் மீறிய உறவுகள் கணிசமாக அதிகரித்துள்ளதாக ஆய்வு கூறுகிறது.

சமீபத்திய ஆய்வுகளின்படி, டேட்டிங் செயலிகளை சுமார் 40 லட்சம் பேர் பயன்படுத்துவதாகக் கூறுகிறது. அவர்களில் 65 சதவிகிதம் ஆண்களும், 35 சதவிகிதம் பெண்களும் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் திருமணமானவர்களே. மேலும், பெண்களின் பங்களிப்பு, கடந்த 2 ஆண்டுகளில் கணிசமாக 148 சதவிகிதம் அதிகரித்துள்ளது. சராசரியாக டேட்டிங் செயலிகளில் ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் முதல் 1.5 மணிநேரம் வரையில் பயனர்கள் அரட்டையடிக்கின்றனர். குறிப்பாக, மதியம் 12 மணிமுதல் 3 மணிவரையிலும், இரவு 10 மணிமுதல் நள்ளிரவு வரையிலும் செயலியின் பயன்பாடு உச்சத்தை அடைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஆண்கள் - 25 முதல் 30 வயதுடைய பெண்களை நாட முயல்வதாகவும், பெண்கள் - 30 முதல் 40 வயதுக்குள்பட்ட ஆண்களை (குறிப்பாக மருத்துவர்கள், பட்டயக் கணக்காளர்கள் போன்ற பொருளாதார ரீதியாக தொழில் வல்லுநர்கள்) விரும்புகிறார்கள்.

# வெளிநாடுகளுக்கு ரூ.38,424 கோடிக்கு இந்திய ஆயுதங்கள் ஏற்றுமதி: முன்னெப்போதும் இல்லாத உச்சம்



புதுடெல்லி, ஏப்.4:

2025-26-ஆம் நிதியாண்டில் இந்தியா இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.38,424 கோடிக்கு பாதுகாப்புத் துறை சார்ந்த ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சாதனை படைத்துள்ளது.

அமெரிக்கா, ரஷியா போன்ற வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை முன்பு இந்தியா இறக்குமதி செய்து வந்தது. அந்த நிலை அண்மைக்காலமாக மாறி வருகிறது. இந்தியா சொந்தமாக உள்நாட்டிலேயே ஆயுதங்களைத் தயாரித்து, அதை நட்பு நாடுகளுக்கும், வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்து வருகிறது. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவுகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இந்தியா கடந்த 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.21,083 கோடிக்கு வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்தது. பின்னர் கடந்த 2024-25-ஆம் நிதியாண்டில் ரூ.23,622 கோடிக்கு வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்திருந்தது.

2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.38,424 கோடிக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளது. இது முந்தைய நிதியாண்டில் செய்யப்பட்ட ஆயுத ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் ரூ.14,802 கோடி அதிகமாகும். அதாவது, நமது ஆயுத ஏற்றுமதி முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 62 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது.

இது இதுவரை இல்லாத அளவுக்கு அதிக ஏற்றுமதியாகும். இந்திய ஆயுத ஏற்றுமதியில் பொதுத் துறை நிறுவனங்கள் 54.84 சதவீதமும், தனியார் நிறுவனங்கள் 45.16 சதவீதமும் பங்களிப்பு அளித்துள்ளன. இந்திய ஆயுத ஏற்றுமதி மிகப்பெரிய அளவில் அதிகரித்திருப்பதற்கு, இந்தியா சொந்தமாகத் தயாரிக்கும் பாதுகாப்புத் தளவாடங்கள் மீதும், நவீன ஆயுத தயாரிப்பு வலிமையின் மீதும் வெளிநாடுகள் வைத்துள்ள நம்பிக்கை அதிகரித்திருப்பதையே காட்டுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் டயாலிசிஸ் சிகிச்சை கண்காணிக்கப்படும்

புதுடெல்லி, ஏப்.4:




செயற்கைநுண்ணறிவு தொழில்நுட்பத்தில் டயாலிசிஸ் சிகிச்சை கண்காணிக்கப்படும் என சுகாதாரத் துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ் தெரிவித்தார்.

பெங்களூரில் உள்ள கே.சி. அரசு மருத்துவமனையில் வியாழக்கிழமை நடைபெற்ற விழாவில், டயாலிசிஸ் சிகிச்சையை செயற்கைநுண்ணறிவுதொழில்நுட்பத்தில் கண்காணிக்கும் முறை திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசியது:

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு தனியார் நிறுவனத்தில் வழங்கப்படுவது போன்ற தரமான சிகிச்சையை வழங்குவதற்காக அரசு மற்றும் தனியார் கூட்டுமுயற்சியில் சிகிச்சை மையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த சிகிச்சை மையங்களில் டயாலிசிஸ் சிகிச்சையை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வழியாக கண்காணிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் தரமான சிகிச்சை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பக் கண்காணிப்பு முறை, பெங்களூரில் உள்ள 7 டயாலிசிஸ் சிகிச்சை மையங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக மேலும் பல புதிய சிகிச்சை மையங்களுக்கு இத்தொழில்நுட்பம் விரிவுபடுத்தப்படும் என்றார்.




## இந்திய பெருங்கடலில் கடத்திய ரூ.100 கோடி ஹெராயின் பறிமுதல்

**ராமேசுவரம், ஏப்.04:** இந்தியப் பெருங்கடலில் மீன்பிடி படகில் கடத்திய ரூ.100 கோடி மதிப்பிலான 323 கிலோ எடையுள்ள ஹெராயின் போதைப் பொருளை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்து 6 பேரை கைது செய்தனர்.

சர்வதேச கடற்பகுதியில் போதைப் பொருட்களை கடத்திச் செல்லும் படகுகள் மற்றும் கப்பல்கள் பற்றி இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையின் தெற்குப் பகுதியிலுள்ள திக்கோவிட்டவில் இருந்து 60 கடல் மைல் தொலைவில் இந்தியப் பெருங்கடலில் சந்தேகத்துக்குரிய ஆழ்கடல் மீன்பிடி படகைக் கண்டனர்.

இதையடுத்து அந்தப்படகை இலங்கை கடற்படையினர் ரோந்து கப் பலில் சுற்றி வளைத்தனர். பின்னர் படகில் சோதனை செய்தபோது 298 பொட்டலங்களில் பதுக்கி வைத்திருந்த 323 கிலோ ஹெராயின் போதைப் பொருள் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

இதன் சர்வதேச மதிப்பு ரூ.100 கோடி ஆகும். படகிலிருந்த இலங்கை யைச் சேர்ந்த 6 பேரை கடற்படையினர் கைது செய்தனர். பறிமுதலான போதைப் பொருட்களுடன் 6 பேரையும் திக்கோவிட்ட கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இந்தப் போதைப் பொருள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டது, கடத்தலில் தொடர்புடையோர் யார் என்பது குறித்து இலங்கை கடற்படையினர் விசாரித்து வருகின்றனர்.

## சென்னை: மாஞ்சா நூல் கழுத்தை அறுத்ததில் ஸ்கூட்டியில் சென்ற பெண் படுகாயம்

**சென்னை, ஏப்.04:** சென்னை நெசப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் கிருத்திகா. இவர் வடபழனியில் உள்ள தனது மகளை ஸ்கூட்டியில் அழைத்து வந்துகொண்டிருந்தார். அப்போது வடபழனி 100 அடி சாலையில் அறுந்து வந்த மாஞ்சா நூல், எதிர்பாராத விதமாக அவரது கழுத்தை அறுத்தது.

ஒரு கட்சித் தொண்டனாக.. தோளோடு தோள் நின்று தேர்தல் பிரசாரம் மேற்கொள்வேன் - அண்ணாமலை

இதில் காயமடைந்த கிருத்திகா, உடனடியாக மீட்கப்பட்டுத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மாஞ்சா நூலால் பெண் ஒருவர் காயமடைந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விபத்தில், நல்வாய்ப்பாக அவருடன் வந்த மகள் காயமின்றி தப்பினார். மாஞ்சா நூல் பயன்படுத்தக் காவல்துறை தடை விதித்துள்ள நிலையிலும், இத்தகைய ஆபத்தான செயல்கள் தொடர்வது வாகன ஓட்டிகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கோவை: வெள்ளியங்கிரி மலைக்கு சென்ற இளைஞர் உயிரிழப்பு



**கோவை, ஏப்.04:** கோவை மாவட்டம் பூண்டி அருகே 'தென்கைலாயம்' என அழைக்கப்படும் வெள்ளியங்கிரி மலை அமைந்துள்ளது. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகும். சுமார் 6000 அடி உயரம் உள்ள வெள்ளியங்கிரி மலை புனிதத் தலமாகவும் பார்க்கப்படுகிறது. ஏழு மலைகளைக் கொண்ட இந்த வெள்ளியங்கிரி மலைத் தொடரில் ஏழாவது மலையில் சுயம்புலிங்கம் அமைந்துள்ளது. இதனை காண, ஆண்டுதோறும் ஏராளமான பக்தர்கள் மலைக்கு வருகை தருவது வழக்கம்.

அதிலும் குறிப்பாக, பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை பக்தர்கள் மலையேற்றம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். பிற மாதங்களில் பனிமூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால், அந்த காலங்களில் பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் கொண்ட இந்த கரடுமுரடான பாதைகளைக் கடந்து பக்தர்கள் மலையேற்றம் செய்கின்றனர். இந்த மலையின் பாதை நெடுந்தூரமாக இருப்பதாலும், இந்த பாதைகள் கரடு முரடாக இருப்பதாலும் உடல்நல பாதிப்பு உள்ளவர்கள் மலையேற்றம் செய்வது ஆபத்தானது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்த மலையில் பக்தர்கள் மலையேறுவதற்கு முன்பு முழு உடல் பரிசோதனை செய்து கொள்வது அவசியம் என்று அறிவுறுத்தப்படுகிறது. இந்நிலையில் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த முகேஷ்குமார் (வயது 23) என்ற இளைஞர் மலை ஏறிக்கொண்டிருந்தார். அதன்படி அவர் 5வது மலையில் ஏறிக் கொண்டிருக்கும் போது திடீரென மயங்கி விழுந்தார். கண் இமைக்கும் நேரத்தில் அவர் மயங்கி கீழே விழ, உடனடி மருத்துவ உதவி கிடைக்காததால் அங்கேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

வெள்ளியங்கிரி மலை எறிய இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. நடப்பு ஆண்டில் வெள்ளியங்கிரி மலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 15 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வாலிபர் போக்சோ வழக்கில் கைது

**திருப்பூர், ஏப்.04:** திருப்பூர் மாவட்டம் பல்லடம் பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி அப்பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் 9-ம் வகுப்பு படித்துவிட்டு பாதியில் நின்று விட்டார். இந்நிலையில் அந்த சிறுமியின் பெற்றோர் அந்த பகுதியில் உள்ள பள்ளியில் காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு வந்தனர்.

அப்போது நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா திடுமல் கவுண்டம்பாளையம் பகுதியை சேர்ந்த சக்திவேல் (22) என்பவர் அந்த பகுதியில் ஜே.சி.பி. ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார்.

இந்நிலையில் 15 வயது சிறுமி அவரது பெற்றோரிடம் தனது தோழியை பார்த்து வருவதாக கூறிவிட்டு பல்லடம் பகுதியில் இருந்து பஸ் ஏறி பரமத்தி வேலூர் வந்தார். அங்கு வந்த சிறுமியை சக்திவேல் அழைத்து கொண்டு வீட்டுக்கு வந்தார். வீட்டில் யாரும் இல்லாததால் சக்திவேல் அந்த சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி பாலியல் வன்கொடுமை செய்தார். பின்னர் அந்த சிறுமி அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார்.

அப்போது சிறுமிக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. அதனால் அந்த சிறுமியின் பெற்றோர் திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் சிறுமி 4 மாத கர்ப்பிணியாக உள்ளார் என்று தெரிவித்தனர். இதனால் பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர்.

சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் டாக்டர்கள் அந்த சிறுமியிடம் விசாரணை நடத்தியதில் திடுமல் கவுண்டம்பாளையம் பகுதியை சேர்ந்த சக்திவேல் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறினார். இதன் காரணமாக சம்பவம் நடந்த இடம் பரமத்திவேலூர் தாலுகா நல்லூர் போலீஸ் நிலையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இடம் என்பதால் சிறுமியின் பெற்றோர் நல்லூர் போலீசில் புகார் செய்தனர்.

புகாரின் பேரில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கெங்காதரன் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த சக்திவேலிடம் விசாரணை நடத்தி போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். பின்னர் நாமக்கல் மகிளா நீதிமன்றத்தில் சக்திவேல் ஆஜர்படுத்தப்பட்டு நீதிபதியின் உத்தரவின் பேரில் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

## சேலத்தில் 97.7 டிகிரி கொளுத்திய வெயில்- வாகன ஓட்டிகள் தவிப்பு



**சென்னை, ஏப்.04:** தமிழகத்தில் கோடை காலம் தொடங்கியது முதலே வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக காலை முதலே வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. மதிய நேரங்களில் வெயிலின் உஷ்ணம் மேலும் அதிகரிப்பதால் சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதன்படி நேற்று காலை முதல் வெயில் கொளுத்திய நிலையில் 97.7டிகிரி பதிவானது. அதன் தொடர்ச்சியாக இன்று காலை முதலே வெயில் கொளுத்தியது. மதிய நேரத்தில் கடும் உஷ்ணமாக இருந்தது. இதனால் சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் தலையை துணியால் மூடிய படியும் தொப்பிகள் அணிந்தபடியும் சாலைகளில் சென்றனர்.

சாலையில் வாகனங்களின் எண்ணிக்கையும் கணிசமாக குறைந்து பெரும்பாலான சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன. மேலும் வெயில் உஷ்ணத்தில் இருந்து தப்பிக்க இளநீர், நுங்கு, தர்பூசணி, மோர், கம்மங்கூழ், வெள்ளரி பிஞ்சு மற்றும் செயற்கை குளிர்பானங்களையும் வாங்கி பருகினர். இதனால் இயற்கை மற்றும் செயற்கை குளிர்பான கடைகளில் பொதுமக்கள் கூட்டம் அதிகரித்தது.

## கோழிப்பண்ணைகளில் பறவைக்காய்ச்சல் நோய் பரவாமல் கண்காணிக்க 45 மருத்துவ குழுக்கள்- கலெக்டர் அறிவிப்பு





**நாமக்கல், ஏப்.04:** நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் கோழிப்பண்ணையாளர்களுக்கான பறவைக்காய்ச்சல் நோய்தடுப்பு,முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலெக்டர் துர்கா மூர்த்தி தலைமை வகித்து பேசியதாவது:-

ராசிபுரம் தாலுகா ஆர். பட்டணம் கிராமத்தில் உள்ள ஒரு கோழிப்பண்ணையில் திடீரென கோழிகள் இறந்தன. அதைத்தொடர்ந்து கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கோழிப்பண்ணைகளில் உயிரி பாதுகாப்பு முறைகளை தீவிரமாக கடைபிடிக்கவேண்டும்.

வனப்பறவைகள் உள்ளே நுழையாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். வாகனங்கள் பண்ணையில் நுழையும் பொழுது கிருமிநாசினி தெளித்த பின்னரே அனுமதிக்கவேண்டும். பண்ணை ஆட்கள் கிருமி நாசினி நிரம்பிய தொட்டியில் கால்களை நனைத்த பிறகே வளாகத்திற்குள் செல்லவேண்டும். பண்ணை வளாகம் மற்றும் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்து கிருமிநாசினி தெளிக்க வேண்டும்.

மேலும் கோழிப்பண்ணைகளில் கோடைகால பராமரிப்பு முறைகள் முறையாக பின்பற்றி கோழிகளுக்கு வெப்ப அயற்சி ஏற்படாத வகையில் பராமரிக்கவேண்டும். கோழிப்பண்ணைகளில் கோழிகள் இறப்பை கண்காணிக்க மாவட்ட அளவில் 45 கால்நடை மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கோழிப்பண்ணைகள் மற்றும் நீர் நிலைகளிலும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள்.

இது தவிர பண்ணைகளில் அசாதாரணமாக கோழிகள் இறப்பு ஏதும் ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவர்களிடம் தகவல் தெரிவிக்கவேண்டும். ராசிபுரம், வெண்ணந்தூர் மற்றும் நாமகிரிப்பேட்டை ஒன்றியங்களில் உள்ள கோழிப்பண்ணைகளைதினமும் கண்காணிக்க கால்நடை பராமரிப்புத்துறை, சுகாதார துறை, உள்ளாட்சி துறை அலுவலர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) அருள் பிரகாஷ்ராஜ், உதவி இயக்குநர்கள் விஜயகுமார், விஜயமூர்த்தி, அலுவலர்கள், மற்றும் கோழிப்பண்ணையாளர்கள் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை- மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



**சென்னை, ஏப்.04:** தமிழக, கர்நாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், குறைந்தும் வந்து கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் கடந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை தீவிரம் காரணமாக நீர்வரத்து அதிகரித்து மேட்டூர் அணை ஒரே ஆண்டில் 7 முறை நிரம்பியது. இதையடுத்து உபரிநீர் திறக்கப்பட்டு காவிரி ஆறு வெள்ளக்காடாக மாறியது.

இந்த நிலையில் மழை நின்றதால் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. அதே நேரம் அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வந்ததால் நீர்மட்டம் குறைய தொடங்கியது.

கடந்த ஜனவரி மாதம் 28-ந் தேதியுடன் டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்டு வந்த தண்ணீர் நிறுத்தப்பட்ட நிலையில் தொடர்ந்து குடிநீர் தேவைக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அதே நேரம் மழை இல்லாததால் கடந்த சில மாதங்களாக அணைக்கு நீர்வரத்தும் குறைந்து காணப்பட்டது.

இதற்கிடையே கடந்த சில நாட்களாக விட்டு விட்டு தமிழக, கர்நாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கோடை மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், குறைந்தும் வந்து கொண்டு இருந்தது. அணைக்கு நேற்று வினாடிக்கு 1133 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் மழையின் காரணமாக இன்று காலை வினாடிக்கு 2800 கனஅடியாக தண்ணீர் அதிகரித்து வந்து கொண்டு இருக்கிறது.

இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 82.52 அடியாக இருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1200 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் தற்போது 44.51 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

அணைக்கு வரும் தண்ணீரை விட குறைந்த அளவிலேயே தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டமும் மெதுவாக உயர்ந்து வருகிறது.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மோசடியாக அனுப்பப்படும் 'லிங்க்' - சைபர் கிரைம் எச்சரிக்கை




**சென்னை, ஏப்.04:** தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந் தேதி நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு அரசியல் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் சமீப நாட்களில் பலரது செல்போன் எண்களில் ஒரு குறுஞ்செய்தி வந்த வண்ணம் உள்ளது. அதில் தேர்தல் ஆணையத்தால் தயார் செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே பெயர் சேர்ப்பதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள லிங்கை அழுத்தவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சைபர் கிரைம் போலீசாருக்கு புகார்கள் அனுப்பப்பட்ட நிலையில் இந்த குறுஞ்செய்தியை யாரும் நம்ப வேண்டாம் என சைபர் கிரைம் போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வாக்காளர் அடையாள அட்டை புதுப்பித்தல், திருத்தம் செய்தல் தொடர்பாக தேர்தல் ஆணையம் தற்போது எந்த பணிகளையும் மேற்கொள்ளவில்லை.

மேலும் தனிப்பட்ட முறையில் தேர்தல் ஆணையம் எந்தவொரு வாக்காளருக்கும் லிங்க் அனுப்பாது. இணையதள மோசடி நபர்கள் வங்கி கணக்கு மற்றும் உங்களைப் பற்றிய விபரங்களை லிங்க் வாயிலாக திருடி பணத்தை அபகரிக்கக் கூடும். எனவே வாக்காளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இது தொடர்பான புகார்களுக்கு www.cybercrime.gov.in என்ற வலைதளம் மற்றும் 1930 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மேலும் இந்த லிங்க் குறித்து தேர்தல் ஆணையத்துடன் இணைந்து தயாரித்த வீடியோ மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதாக திண்டுக்கல் மாவட்ட சைபர் கிரைம் போலீசார் தெரிவித்துள்ளனர்.

## மதுரை கோட்டத்தில் பராமரிப்பு பணி: சில எக்ஸ்பிரஸ் ரெயில் சேவைகளில் மாற்றம்- தெற்கு ரெயில்வே அறிவிப்பு

**மதுரை, ஏப்.04:** மதுரை கோட்டத்தில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு பணி காரணமாக, குருவாயூர்-சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரெயில் மாற்றுப்பாதையில் இயக்கப்பட இருப்பதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மதுரை கோட்டத்தில் நடைபெற இருக்கும் பராமரிப்பு பணி காரணமாக, சில எக்ஸ்பிரஸ் ரெயில் சேவைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

* நாகர்கோவிலில் இருந்து வருகிற 5,9,12,16,19,20,30 ஆகிய தேதிகளில் காலை 6.15 மணிக்கு புறப்பட்டு மும்பை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்.16352), மதுரை, மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக செல்லும். திண்டுக்கல் செல்லாது. கூடுதலாகஅருப்புக்கோட்டை, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய நிறுத்தங்களில் நின்று செல்லும்.

* கன்னியாகுமரியில் இருந்து வருகிற 4,11,18,25 ஆகிய தேதிகளில் காலை 5.50 மணிக்கு புறப்பட்டு ஹவுரா செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (12666), மதுரை, மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக செல்லும். கொடைக்கானல் சாலை மற்றும் திண்டுக்கல் செல்லாது. கூடுதலாக சிவகங்கை, புதுக்கோட்டை ஆகியவற்றில் நின்று செல்லும்.

* குருவாயூரில் இருந்து இன்று, 4,5,6,8,9,10,11,12,13,15,16,17,18,19,20,23,24,25,26,27,28,29 ஆகிய தேதிகளில் இரவு 11.15 மணிக்கு புறப்பட்டு சென்னை எழும்பூர் வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16128), விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக செல்லும். மதுரை, சோழவந்தான், கொடைக்கானல் சாலை, திண்டுக்கல், மணப்பாறை செல்லாது. கூடுதலாக அருப்புக்கோட்டை,சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

* கன்னியாகுமரியில் இருந்து வருகிற 10,17,24 ஆகிய தேதிகளில் காலை 5.15 மணிக்கு புறப்பட்டு ஐதராபாத் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (17070), மதுரை, மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக செல்லும். கொடைக்கானல் சாலை, திண்டுக்கல் செல்லாது. கூடுதலாக சிவங்கைகை, புதுக்கோட்டை ஆகிய நிறுத்தங்களில் நின்று செல்லும்.

* தூத்துக்குடியில் இருந்து வருகிற 29-ந்தேதி காலை 7.40 மணிக்கு புறப்பட்டு காச்சிகுடா செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (17616), விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சி வழியாக செல்லும். மதுரை, திண்டுக்கல் செல்லாது. கூடுதலாக, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகியவற்றில் நின்று செல்லும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தங்கம் விலை சவரனுக்கு ரூ.800 உயர்வு



**சென்னை, ஏப்.04:** தங்கம் விலை கடந்த மாதம் (மார்ச்) 25-ந்தேதியில் இருந்து விலை ஏற்ற-இறக்கத்துடனேயே நீடித்து வருகிறது.

கடந்த சில நாட்களாக பெரிய அளவில் உயர்வு இல்லாமல் இருந்த நிலையில், நேற்று முன்தினம் ரூ.380 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14 ஆயிரத்து 50-க்கும், சவரனுக்கு ரூ.3 ஆயிரத்து 40-ம் அதிரடியாக உயர்ந்து ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 12 ஆயிரத்து 400-க்கும் விற்பனையானது.

நேற்று கிராமுக்கு ரூ.100-ம், சவரனுக்கு ரூ.800-ம் குறைந்தது. பின்னர் மாலையில் கூடுதலாக கிராமுக்கு ரூ.200-ம், சவரனுக்கு ரூ.1,600-ம் சரிந்தது. ஆக நேற்று மட்டும் மொத்தம் கிராமுக்கு ரூ.300-ம், சவரனுக்கு ரூ.2 ஆயிரத்து 400-ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 750-க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 10 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

இந்நிலையில்சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 உயர்ந்து ரூ.1,10,800-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ரூ.13,850-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.255-க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## முட்டக்குறிச்சி பத்ரகாளியம்மன் கோவில் பங்குனி பொங்கல் விழா பக்தர்கள் அக்னி சட்டி எடுத்து வழிபாடு






**மானாமதுரை, ஏப்.04:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ள முட்டக்குறிச்சி கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற க்ஷத்திரிய நாடார் உறவின் முறையாளர்களுக்கு பாத்தியமான ஶ்ரீ பத்திரகாளியம்மன் கோவிலில் பங்குனி பொங்கல் விழா கடந்த 24 ந்தேதி காப்புகட்டுதலுடன் தொடங்கியது.

உலக மக்கள் நன்மைக்காவும் விவசாயம் செழிக்க வேண்டி பக்தர்கள் வைகை ஆற்றில் இருந்து புனித தீர்த்தம்,பால்குடம், அலகு குத்தி அக்னி சட்டி எடுத்து வந்து வழிபாடு செய்தனர்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற பூச் சொரிதல் விழாவை முன் னிட்டு ஏராளமான பக் தர்கள் பூத்தட்டுகளை ஊர்வலமாக கொண்டு வந்து அம்மனுக்கு படைத்தனர்.

நேற்று பொங்கல் விழாவை முன்னிட்டு பக் தர்கள் பாலாபிஷேகம் செய்து பொங்கல் வைத்து பூஜைகள் செய்தனர். ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## 64 தொகுதிகளில் சசிகலா கட்சி போட்டி சிவகங்கை தொகுதியில் வழக்கறிஞர் குரு. முருகானந்தம் போட்டி



**சிவகங்கை, ஏப்.04:** அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கியுள்ள மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி தொண்டர்களால் சின்னம்மா என்று அழைக்கப்படும் சசிகலா, சட் டப்பேரவைத் தேர்தலில் பாமக நிறுவனர் ராமதாஸ~டன் கூட்டணி அமைத்து போட்டி யிடுகிறார். முதல்கட்டமாக 21 வேட்பாளர்கள், அடுத்து 38 வேட்பாளர்களை அறிவித்த நிலையில், நேற்று 5 பேர் கொண்ட 3-ம் பட்டியலை சசிகலா வெளியிட்டுள்ளார்.

மொத்தத்தில் சசிகலா கட்சி 64 தொகுதிகளில் போட்டியிடு கிறது. இதில் சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் ராஜகெம்பீரம் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் குரு . முருகானந்தம் போட்டியிடுகிறார். தீவிர அதிமுக பிரமுகராக இருந்து அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மாநில செய்தி தொடர்பாளராக இருந்து டிடிவி. தினகரன் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்ந்ததால் அதிருப்தி அடைந்து அகில இந்திய புரட்சி தலைவர் முன்னேற்றக் கழகத்தில் இணைந்து சசிகலா அவர்களால் சிவகங்கை தொகுதி வேட்பாளராக அறிவிக்க பட்டு தற்போது சிவகங்கை தொகுதியில் முக்கிய பிரமுகர்கள் தொண்டர்கள் சந்தித்து ஆதரவு திரட்டினார்.

அதிமுக வில் அதிருப்தி அடைந்த நிர்வாகிகளையும் சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார்.

## சட்டப் பேரவைத் தேர்தல் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக தலைமைச் செயலகத்தில் ஆலோசனை

**சென்னை, ஏப்.04:** சட்டப் பேரவைத் தேர்தல் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தி வருகிறார்.

தலைமைச் செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர் தீரஜ் குமார், சட்டம் ஒழுங்கு டிஜிபி சந்தீப் ராய் ரதோர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

பிரதமர் வருகை, அரசியல் கட்சித் தலைவர்களுக்கான பரப்புரை பாதுகாப்பு, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நாளன்று பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்படுகிறது

## சட்ட ரீதியாக எந்த தடையும் இல்லாத போது சென்னையில் ஐபிஎல் போட்டிகளுக்கு எப்படி தடை விதிக்க முடியும்? - ஐகோர்ட் கேள்வி

**சென்னை, ஏப்.04:** சட்ட ரீதியாக எந்த தடையும் இல்லாதபோது, சென்னையில் நடைபெறும் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளுக்கு எப்படி தடை விதிக்க முடியும் என, சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.



சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் தேர்தல் நேரத்தில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவதால் சட்டம் - ஒழுங்கை பாதுகாப்பதில் போலீஸாருக்கு சிக்கல் ஏற்படும்.

கிரிக்கெட் ரசிகர்கள் என்ற பெயரில் கூடும் கூட்டத்தினர் அரசியல் கட்சியினருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யக்கூடும் என்பதால் அதற்கு தடை விதிக்கக் கோரியும், குறிப்பாக, சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பங்கேற்கும் கிரிக்கெட் போட்டிகளை தேர்தலுக்குப் பிறகு தள்ளி வைக்கக் கோரியும் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி வாக்காளரான பிரபாகரன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்கக் கோரி மனுதாரர் தரப்பில், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் முறையீடு செய்யப்பட்டது.

அந்த முறையீட்டை ஏற்க மறுத்த நீதிபதிகள், சட்ட ரீதியாக எந்த தடையும் இல்லாத போது சென்னையில் நடைபெறும் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளுக்கு எப்படி தடை விதிக்க முடியும் என கேள்வி எழுப்பினர்.

வழக்கு எண்ணிடப்பட்டு முறையாக விசாரணைக்கு வரும் போது வழக்கமான நடைமுறையின்படி விசாரிக்கப்படும் என தெரிவித்த நீதிபதிகள், போட்டிகள் நடப்பதால் உங்களுக்கு என்ன பிரச்சினை என்றும், கிரிக்கெட் போட்டிகளை பார்க்க விரும்பவில்லை எனில் வீட்டிலேயே இருங்கள் என்றும் கருத்து தெரிவித்தனர்.

## பிரச்சாரத்தின் போது மாற்றுத்திறனாளிகளை சந்தித்த கனிமொழி எம்பி





**சிவகங்கை, ஏப்.04:** சிவகங்கை மாவட்டம் கீழடியில் இருந்து திமுக கழக துணை பொதுச் செயலாளர். கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கவிஞர் கனிமொழி க தமிழர்களின் தொன்மை நாகரீக மண்ணான கீழடி அமைந்துள்ள மானாமதுரை தொகுதியிலும் தங்களது பிரச்சாரத்தை தொடங்கினார்.

இதனிடையே தேர்தல் பரப்புரை முதல் நாளில் மதுரையில் இருந்து சாலையாக திருப்புவனம் வந்தடைந்து அங்கு திமுக தொகுதி வேட்பாளர் ஆ.தமிழரசி ரவிக்குமாரை ஆதரித்து மேற்கொண்டார் பரப்புரை.

அதைத் மானாமதுரை பைபாஸ் சாலை வழியாக வந்த பொது அங்கு வர வேற்ற இளையான்குடி முன்னாள் எம்எல்ஏ வடக்கு ஒன்றிய செயலாளர் சுப.மதியரசன் மற்றும் திமுக மாற்றுத் திறனாளிகள் அணி மாநில இணைச் செயலாளர். நலவாரிய உறுப்பினர். கவுன்சிலர் புஷ்பராஜ் ஆகியோரை சந்தித்து பேசினார்.

மாற்றுத்திறனாளிகள் அனைவரும் எம்பி கனிமொழியிடம் கழக ஆட்சி தொடரும் 200 க்கு 200 வெற்றி பெறுவோம் என கோஷம் எழுப்பினார்கள். உடன் மானாமதுரை தொகுதி திமுக வேட்பாளர் தமிழரசி உடன் இருந்தார்.

## அரசியல் கார்னர்

## அண்ணாமலைக்கு ‘சீட்’ மறுப்பு ஏன்? – நயினார் நாகேந்திரன் பதில்

**சென்னை, ஏப்.04:** அண்ணாமலை பெயர் பாஜக வேட்பாளர் பட்டியலில் இடம்பெறாதது குறித்த கேள்விக்கு, ‘இது அகில இந்திய தலைமை எடுத்த முடிவு’ என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பதிலளித்துள்ளார்.

தமிழக பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியீடு: மயிலாப்பூரில் தமிழிசை, சாத்தூரில் நயினார் போட்டி

அதன்படி, நயினார் நாகேந்திரன் சாத்தூரிலும், தமிழிசை சவுந்தர்ராஜன் மயிலாப்பூரிலும், எல்.முருகன் அவிநாசி (தனி) தொகுதியிலும், வானதி சீனிவாசன் கோவை தெற்கிலும் போட்டியிடுகின்றனர். அண்ணாமலை தேர்தலில் போட்டியிடவில்லை.

இந்நிலையில், செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறும்போது, “பாஜகவின் அகில இந்திய தலைமை 27 தொகுதிக்கான வேட்பாளர்களை அறிவித்திருக்கிறது. தேசிய ஜனநாயக கூட்டணியில் போட்டியிட்டு 27 தொகுதிகளில் சட்டப்பேரவை தலைவர்களை பெறுவோம்.

மீண்டும் எல்.எல்.ஏக்களுக்கும், இணை அமைச்சருக்கும் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அகில இந்திய தலைமை சொல்வதை நாங்கள் செய்வோம்” என்றார்.

அப்போது, ’தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை பெயர் பாஜக வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவதாக சொன்னீர்கள், ஆனால் பெயர் இடம்பெறவிலையே’ என செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, ‘இது அகில இந்திய தலைமை எடுத்த முடிவு’ என பதிலளித்துளார்.

இதனிடையே அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில், “2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ள, பாஜகவைச் சேர்ந்த வெற்றி வேட்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

பிரதமர் மோடியின் தொலைநோக்குமிக்க தலைமையின் கீழ், இந்தியா வலிமையுடனும், ஒரு தெளிவான நோக்கத்துடனும் முன்னேறி வருகிறது. தேசம் இவ்வாறு முன்னேறிக் கொண்டிருக்கும் வேளையில், சுயநலம் மட்டுமே கொண்ட திமுக அரசால் தமிழ்நாடு பின்தள்ளப்பட்டுள்ளது.

வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் என்டிஏ கூட்டணி 210 இடங்களை வெல்ல வேண்டும் என்ற இலக்குடன், நமது வெற்றி வேட்பாளர்களான பாஜக மற்றும் பிற என்டிஏ வேட்பாளர்கள் அனைவருக்கும் தோளோடு தோள் நின்று நான் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## திமுக வேட்பாளர் காலில் விழுந்து வணங்கிய கும்மிடிப்பூண்டி அதிமுக வேட்பாளர்



**திருவள்ளூர், ஏப்.04:** கும்மிடிப்பூண்டி அதிமுக வேட்பாளர் சுதாகர், திமுக வேட்பாளர் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் வாங்கியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரின் கீழ் உள்ள 10 சட்டப்பேரவை தொகுதிகளில் கடந்த 30-ம் தேதி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உட்பட 24 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தொடர் விடுமுறைக்குப் பின் 2-வது நாளாக நேற்று நடைபெற்ற வேட்புமனு தாக்கலில், கும்மிடிப்பூண்டி தொகுதியில், திமுக வேட்பாளர் டி.ஜெ. கோவிந்தராஜன், அதிமுக வேட்பாளர் சுதாகர், தவெக வேட்பாளர் விஜயகுமார், சுயேச்சை வேட்பாளர் ராமசந்திரரெட்டி உள்ளிட்டோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

திமுக வேட்பாளர் டி.ஜெ. கோவிந்த ராஜன் வேட்புமனுவை தாக்கல் செய்து விட்டு வெளியே வந்தபோது, அதிமுக வேட்பாளர் சுதாகர் வேட்புமனு தாக்கல் செய்ய அலுவலகம் உள்ளே சென்றார்.

இருவரும் நேருக்கு சந்தித்தனர். அப்போது யாரும் எதிர்பாராத வகையில், திமுக வேட்பாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் காலில் சுதாகர் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார். இச்சம்பவம், அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## காஞ்சிபுரம் தேவராஜசுவாமி கோவில் புனரமைப்பு ஆகம விதிகள் மீறப்படுவதாக எதிர்ப்பு

**காஞ்சிபுரம், ஏப்.04:** கோவில் மாநகரம் காஞ்சிபுரத்தில் பிரசித்தி பெற்ற தேவராஜசுவாமி கோவிலில் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகளை ஆய்வு செய்வதற்காக எஸ்.எல்.இ.சி (SLEC) அமைப்பின் துணைக்குழு ஒன்று நேரில் சென்றது. இந்தப் பணிகள் சட்டவிரோதமானவை மற்றும் கோவிலின் பாரம்பரிய, ஆகம மரபுகளுக்கு எதிரானவை என விஜயநகரப் பேரரசின் மரபுரிமைத் தலைவர் ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் முன்பே கருத்து தெரிவித்திருந்தார். மாநில தொல்லியல் துறைத் தலைவர் இக்குழுவில் இடம்பெறாததால், துணைக்குழுவின் அமைப்பு குறித்து ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புகள் எழுந்தன. இதனிடையே, ஆகம மற்றும் பாரம்பரிய அடிப்படையில் சுமார் 50-க்கும் மேற்பட்ட ஆட்சேபனைகள்



இந்தக் குழுவுக்கு கிடைத்துள்ளன. மைசூரின் பரகால மடம், அஹோபிலம் மடம், உத்தராதி மடம், வ்யாசராஜ மடம், தஞ்சாவூரின் பீம்ராஜ கோஸ்வாமி மடம் உள்ளிட்ட முக்கிய மத அமைப்புகள் மற்றும் ஸ்ரீரங்கம், திருவனந்தபுரம், பத்ரிநாத் பகுதிகளைச் சேர்ந்த அர்ச்சகர்களும், இந்தப் புனரமைப்பு பணிகள் கோயிலின் ஆகம முறைகளுக்கு முரணானவை என வலியுறுத்தியுள்ளனர்.

‘பாண்டியர்கள் தேடி பயணம்’ வரலாற்று ஆய்வு குழு தலைமை ஆய்வாளர் எஸ். மணிகண்டன் கூறுகையில், மின் இணைப்புப் பணிகளின் போது பல கல்வெட்டுகள் சேதமடைந்துள்ளதாகவும், இரும்புக் கம்பிகள் பொருத்தும் பணிகளில் பழமையான சுவர் ஓவியங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம்சாட்டினார்.

மேலும், இந்த குற்றச்சாட்டுகள் குறித்து கோயில் நிர்வாகம் தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். இந்த நிலையில், கோவிலின் ஆகம மற்றும் பாரம்பரிய முக்கியத்துவத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகள் நிபுணர் குழுவால் நிறுத்தப்படுமா என்பது குறித்து பக்தர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM